விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
184 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

முதற் பதிப்பு

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
(தனிப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்,"
184 A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

தாமரைக்கும் குடியகலேம்

புத்தகம் 1 | கொழும்பு, சாவகருடு வரு மார்கழி மீ 16 செவ்வாய்க்கிழமை — Colombo, December, 16 1947 — ஹிஜிரி 1367 ஸபர் பிறை 2 | ஈதல் 195

பலமுள்ள சுதந்திர, ஜனநாயக இந்தியாவின் லட்சியம்

ஏற்றத் தாழ்வை ஒழித்து கூட்டுறவு முறையில் ஆக்க வேலைகளைச் செய்ய சக்திகளைத் திரட்டுக!

முன்னேற்றமளிக்கும் தெளிவான சிந்தனை, அஞ்சா நெஞ்சம், விசால நோக்கு ஆகிய நம் முன்னோரளித்த ஆஸ்தியை விரயம் செய்யாதீர்கள்

அலகாபாத் சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் பண்டித நேரு பிரசங்கம்

அலகாபாத், டிச. 14

"பலமான சுதந்திர, ஜனநாயக இந்தியாவை ஏற்படுத்துவதே நம லட்சியம். நமது அந்த அரசாங்கத்தில், எல்லோருக்கும் சம உரிமையும், முன்னேறுவதற்கு சம சந்தர்ப்பங்களும் இருக்கும்" என்று இந்திய பிரதமர் பண்டித நேரு இங்கு சர்வகலாசாலையில் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

செல்வத்திலும் அந்தஸ்திலும் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகள் நீங்கினதாகவும், சக்தி முழுவதும் கூட்டுறவு முறையில் நடைபெறும் ஆக்க வேலைகளுக்கு பிரயோகிக்கும்படியான நிலைமை உள்ளதாகவும் நமது அரசாங்கம் இருக்கும் என்றும் நேருஜி குறிப்பிட்டார்.

"அத்தகைய நவ இந்தியாவில் வகுப்புவாதம், தீண்டாமை ஒதுங்கி நிற்பது. சுரண்டல் முதலியவைகளுக்கு இடமில்லை. மத சுதந்திரம் உண்டு. ஆனால் தேசத்தின் அரசியல் பொருளாதார வாழ்வில் குறுக்கிடுவதற்கு மதத்திற்கு உரிமை கிடையாது. அப்படி ஏற்படவேண்டுமானால் அரசியல் துறையைப் பொறுத்தவரை ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இதர மதத்தவர்கள் என்ற பேச்சே இல்லாமல் போகவேண்டும்" என்றும் நேருஜி குறிப்பிட்டார்.

7000 பேர் முன்னிலையில் பட்டம் பெற்றார்

டாக்டர் கவுண் தரித்திருந்த பண்டித (நரு, அலகாபாத் சர்வகலாசாலையின் அதிபர் ஸ்ரீமான் ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவிடமிருந்து விஞ்ஞான டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இந்த வைபவத்தைக் காண, இந்தியாவில் பல பாகங்களிலிருந்து வந்துள்ள பிரபலஸ்தர்கள் உட்பட சுமார் 7000 பேர் கூடியிருந்தனர்.

கிராமங்களே உயிர்

இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு இன்று அலகாபாத் சர்வகலாசாலையில் பட்டமளிப்பு விழாவின்போது பேசியதாவது:-

எனது சொந்த ஊரான அலகாபாத்துக்கு வெகு நாள் கழித்து வந்திருக்கிறேன். இந்த ஊருக்கு நான் அநேகமாகப் புதியவனாகிவிட்டேன். 15 மாத காலமாக நான் பழையபடிக்கு அருகாமையில் உள்ள புது டில்லியில் வசித்து வருகிறேன். இந்த இரு நகரங்களையும் பற்றி நினைக்கும்போது, இந்தியாவின் சரித்திரம் முழுவதுமே என் கண்முன் நிற்கிறது. ஒரு வருக்குப் பின் ஒருவராக வந்த மன்னர்களைப் பற்றிக்கூட அல்ல. இந்த தேசத்தின் ஜீவனுமாகும், ஆத்மார்த்திக துறையிலும் இந்த நாட்டில் தோன்றிய சிந்தனைகளும் செயல்களுமே என்னைக் கண்முன் காட்சி அளிக்கின்றன.

ஒரு தேசத்தின் உயிர், அதிலும் இந்தியாவைப் போன்ற ஒரு தேசத்தில் உயிர், கிராமங்களில்தான் வதிகிறது. நகரங்கள் சில சமயங்களில் விரும்பத்தகாத அச்சங்களும் பிரதிநிதித்துவம் வகித்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட கலாச்சார வளர்ச்சியை, நகரங்கள்தான் பிரதிபலிக்கின்றன. ஆகவே இந்தியாவின் நகரங்கள், தேசத்தின் கலாசார வளர்ச்சியையும், நீண்ட நாள் கலாசார வளர்ச்சியால் விளையும் ஆத்மபலத்தையும் நமக்கு ஞாபக மூட்டுகின்றன.

இந்த நவ உலகில், சர்வ கலாசாலைகள் நமக்கு போதிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. நான் விஞ்ஞானத்தில் பற்றுக்கொண்டவன். விஞ்ஞான முறைகள் மூலமாகவே உலகம் காப்பாற்றப் படவேண்டும் என்றால், அப்படி காப்பாற்றமுடியும் என்பதில் நம்பிக்கைகொண்டவன். ஆனால் நாம் எத்தகைய கல்வி முறையைப் பின்பற்றினாலும் சரி; அதனால் எத்தனை லாபமிருந்தாலும் சரி, கல்வி மாளிகைக்கு ஒரு குறிப்பிட்ட அஸ்திவாரமுண்டு அது இல்லையானால் மணலில் கோட்டை கட்டியதாகவே முடியும். இந்த அதி அத்தியாவசியமான அஸ்திவாரம் எப்படியிருக்கவேண்டும் என்பதை உணருவதும், அதைவற்புறுத்துவதும் சர்வ கலாசாலைகளின் பொறுப்பு.

நம்பிக்கையூட்டியகுடர்ஒளி

இந்தியா வகுப்புக் கலகத்தில் இறங்கி ஒளியே மறைந்துவிடும்போல இருந்தது. ஆனால் ஒரு சுடரொளி, தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டிருந்தது. பக்கத்திலே இருந்த இருளை அகற்றவும் அது தன்கதிர்களை பரப்பியது. அந்த சுடரொளியைப் பார்த்த நமக்கு நம்பிக்கையும் பலமும் திரும்பவந்தன. தற்காலிகமாக என்ன நாசகேடுகள் ஏற்பட்டாலும் சரி, இந்தியாவின் ஆத்மா, வலிமைமிக்கதாய் இருக்கிறது. அமளிகளையும் மீறி அது கம்பீரமாக நின்றிருக்கிறது என்பதை உணர்ந்தோம்.

மகாத்மா இருந்ததனால் இந்தியாவுக்கு என்ன ஏற்பட்டது என்பதை உணருகிறீர்கள். 50வருஷங்களுக்கும் மேலாகவே இந்தியாவுக்கு சுதந்திரம்பெறவும் அவர் செய்த மகத்தான சேவையை நாம் எல்லோரும் அறிவோம்.

ஆனால் அவர் செய்த எதுவும் சென்ற 4 மாதங்களில் செய்த சேவையை விட பெரிதாக இருக்க முடியாது.

இந்த சுடரொளி இருந்ததுகாரணமாகத்தான், இந்தியாவைக் குறித்தும் அதன் மக்களைக்குறித்தும் நாம் நம்பிக்கை

பிரதிநிதிகள் சபை

பிரதம மந்திரிக்கு மோட்டார் கார் வாங்க 23,000 ரூபா

இச்செலவை ரத்துச் செய்க!

மான்யக்கோரிக்கைகளுக்கு வெட்டுப் பிரேரணைகள்

கொழும்பு, டிச. 15

இன்று பகல் ஒரு மணிக்கு பிரதிநிதிகள் சபை கூடுகிறது. வரவுசெலவுத் திட்டம் பிரதிநிதிகள் சபையில் கமிட்டி முறையில் விவாதிக்கப்படும்.

வரவு செலவுத் திட்டத்தில் கோரப்பட்டுள்ள மான்யங்கள் பலவற்றிற்கு பல அங்கத்தினர்கள் வெட்டுப் பிரேரணைகளை மூலம் பல திருத்தங்கள் கொண்டு வருவார்கள்.

அவைகளில் முக்கியமானவை பின்வருமாறு:-

அரசாங்கத்தின் பிரதம சிங்கள மொழி பெயர்ப்பாளர்செலவுக்குக் கோரப்படும் மான்யத்தில் 4800 ரூபாய் குறைக்க வேண்டுமென்று திரு. வி.குமாரசாமி ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வருவார்.

கவர்னர் செலவுக்காகக் கோரப்படும் மான்யம் 517,947 ரூபாயில் 76 500 ரூபாய் குறைக்க வேண்டுமென்று டாக்டர் என். எம். பெரேரா ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வருவார்.

பிரதம நீதிபதி செலவுக்காக கோரப்படும் மான்யத்தில் 3750 ரூபாய் குறைக்க வேண்டுமென்றும், மற்ற நீதிபதிகளுக்காகக் கோரப்படும் செலவில் 30 000 ரூபாய்குறைக்கவேண்டுமென்றும திரு. கே. கனகரத்தினம் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டுவருவார்.

பிரதம மந்திரி செலவினமாகிய 151,322 ரூபாயில்18,000 ரூபாய் குறைக்கவேண்டுமென்றும், பிரதம மந்திரி வாசஸ்தலச் செலவு 2500 ரூபாயும், பிரதம மந்திரி மோட்டார் கேரேஜ் செலவு 7600 ரூபாயும் பிரதம மந்திரிக்கு புதிய கார் வாங்கும் செலவு 23 000 ரூபாயையும் ரத்துச் செய்ய வேண்டுமென்றும் டாக்டர் என். எம் பெரேரா திருத்தி பிரேரணைகள் கொண்டுவருவார்.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் செலவிலும் 582,800 ரூபாவில் 88 800 ரூபாய் குறைக்க வேண்டுமென்று திரு. கே. கனகரத்னம் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டுவருவார்.

இழக்கவில்லை, இழப்பினும்கப்பிரிந்த இருளே ஒரு வகையாகத்தான் இருந்தது. சுதந்திர சூரியன் உதயமான பிறகும் அந்த இருளிலே நாம் விழுந்துவிடக்கூடாது.

இந்தியாவில் மதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கூக்குரலிடப்பட்டது. நமது தேசத்தின் நீண்டகால சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். நமது முதாதையர்கள் எப்பொழுதெல்லாம் உலகத்தை தெளிவாகவும் அஞ்சாமலுமிருந்தார்களோ, எப்பொழுதெல்லாம் விசால மனோபாவத்துடன் இருந்தார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் அதிசயமான முன்னேற்றத்தை அடைந்தனர். இத்தகைய அபூர்வமான பிதுரார்ஜிதம் நமக்குக் கிடைத்துள்ளது. இதை நாம் துஷ்பிரயோகம் செய்யலாகாது.

வெள்ளை-கறுப்பு தோட்ட முதலாளிகள் கூட்டுறவு

இலங்கையில் ஏற்படுத்த முயற்சி

கண்டி, டிச. 14

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு எச். எஸ். ஹாஸ்ட் நேற்று மாலை "க்வீன்ஸ ஹோட்டலில் நடைபெற்ற சங்கத்தின் 11 வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இலங்கை மீது சீக்கிரப் தாக்குதலை நாடாகப்போகிறது. இலங்கை மக்களுக்கு இந்த சமயங்கள் வழங்கப்போகிறதை தெரிவித்துக்கொள்கிறோம். இலங்கையின் மண் எங்களுக்குச் சொந்தமாகுவதால் நாங்களே இலங்கை ஜனங்களின் க்ஷேமத்தை விரும்புவது சகஜமே ஆகும். இலங்கையின் பொருளாதாரம் இன்னும் பல ஆண்டுகளுக்கு தோட்டத் தொழிலை அடிப்படையாகக்கொண்டே இருந்துவரும். இலங்கையில் தோட்டத் தொழில் நடைபெறுவதற்கு காரண பூதர்களாகவும் முக்கிய பங்குபற்றியவர்களாகவுமிருப்பதால் அரசாங்க விவகாரங்களிலும் நாங்கள் முக்கியமாக அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும். நாங்கள் அங்கத்தில் சுதேசிகளான தோட்ட முதலாளிகள் அங்கத்தினர்களாகச் சேர்ந்து வருவது அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆகவே இலங்கை முதலாளிகளின் தொழிலாளர்கள் சம்பந்தமாகவும் ஐரோப்பிய முதலாளிகளின் தொழில் தொழிலாளர்கள் சம்பந்தமாகவுமுள்ள பிரச்னைகளில் சமரசமான முறையைக் கையாள நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகியிருக்கிறது. இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதற்கு ஆலோசித்து முடிவுசெய்ய ஒரு கமிட்டி நியமித்திருக்கிறோம். ஜனவரி மாதம் அம் முடிவு தெரிந்ததும் எங்களுடன் ஒத்துழைக்கும்படி சென்ட்ரல் கில்வா மூலம் தாழ்ந்த பிரதேசங்களை பொருள் தோட்ட முதலாளிகள் சங்கத்தைக் கேட்டுக் கொள்வோம். தோட்ட முதலாளிகளின் வாழ்க்கைத்தரம் 1939 வது வருடத்திலிருந்ததைவிட மிக மோசமாகிவிட்டது. தோட்ட முதலாளிகள் சுதேச பாஷைகளைக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்கள் சங்கத்தில் சென்றவருடத்தைப்போலவே இந்த வருடத்திலும் ஆயிரம் அங்கத்தினர்களிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மன்னரின் 52-வது பிறந்த தினம்

லண்டன், டிச. 14

ஜார்ஜ் மன்னரின் 52-வது பிறந்த தினக் கொண்டாட்டவிழாவிலுள்ள ராயல் லாஜில் நடைபெற்றது. ஒரு சிறிய விருந்துக் கோஷ்டியினர் விருந்து செய்திருந்தனர். உல்லாசப் பயணம் சென்றிருந்த புதுமணத் தம்பதிகளான எலிஸபெத் இளவரசியும் எடின்பரோ கோமகனும் உல்லாசயாத்திரையை முடித்துக் கொண்டு, ஸ்காட்லந்திலிருந்து இன்று காலை லண்டன் வந்து மன்னர் பிறந்த தினவைபவத்தில் கலந்துகொண்டனர். எடின்பரோ கோமகன் நாவிகடற் படையில் தனது உத்தியோகத்தில் போய் பழையபடி சேர்ந்துகொள்வார். [ராய்ட்டர்

இலங்கையின் வீரத் தமிழர்

யுத்த சேவைப் பரிசு பெறுகிறார்

கொழும்பு, டிச. 15

சென்ற யுத்தத்தில் ஏழு போர் முனைகளில் யுத்த அனுபவம் பெற்ற இலங்கை சோல்ஜரான லான்ஸ் கார்ப்போரல் ஜாக்கம் இ. ராசநாயகத்திற்கு அவரது வீர தீரச் சேவைகளைப் பாராட்டுமுகத்தான் இன்று ராணி மாளிகையில் கவர்னர், பிரிட்டிஷ் எம்பயர் மெடலை வழங்குவார்.

திரு ராசநாயகம் செயின்ட் பீட்டர் கல்லூரியில் படித்தவர். ஆர் ஏ. எஸ் சி யில் சேர்ந்து அவர் யுத்தத்திற்குச் சென்றார். எரிடரி, சூடான், எகிப்து, சிங்கப்பூர், மலேயா, மால்டா, சிசிலி ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் ஈடுபட்டிருந்தார். இத்தாலியப் போரில் அவர் செய்த சேவைக்காக, அவருக்கு பிரிட்டிஷ் எம்பயர் மெடல் அளிக்கப்பட்டது. பரிசுத்த பாப்பரசர் அவருக்கு சமுகமளித்தார். லண்டனில் வெற்றி அணி வகுப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது அவர் இலங்கை கோஷ்டியில் சேர்ந்து லண்டன் சென்றதில் கலந்துகொண்டார். அவருக்கு ஏற்கெனவே ஆப்பிரிக்க ஸ்டார், இத்தாலிய ஸ்டார், 1939-45வது வருடத்திய மெடல், யுத்த மெடல், பாதுகாப்பு மெடல் ஆகிய பல பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

---

4 மைல் நீளத்தில் இலங்கை சினிமாப்படம்

கொழும்பு. டிச. 14

1948 மேமாத வாக்கில் சினிமாப் படத்தில் இலங்கையின் காட்சிகளைப்பார்க்கலாம் பிரிட்டிஷ் பிலிம் முதலாளி ஆர்தர் ராங்க் கம்பெனி இப்படத்தை எடுக்கிறது. 'நவீன உலகம்' என்ற படத்தில் இது ஒரு தொகுதியாகக் காண்பிக்கப்படும். அக்கம்பெனியைச் சேர்ந்த திரு ஸிரிபோர்ட் ஹார்ன்பி சென்ற மாதகாலமாக இலங்கையில் காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார். இது வரை 20 ஆயிரம் அடி அதாவது 4 மைல் நீளம் படம் பிடித்திருக்கிறார். அனுராதபுரம், பொலனறுவை புராதன சின்னங்கள், கண்டி பெரஹரா, பொதுத் தேர்தல் கூட்டங்கள், பாராளுமன்றக் திறப்பு விழா, வீட்டிலும் வெளியிலும் ஆண்களும் பெண்களும் புரியும் வேலைகள், உணவுப் பொருள் உற்பத்தி, இறக்குமதி விநியோகம் சம்பந்தமான காட்சிகள், மினிப்பேமின் னேரியா விவசாயத்திட்டக் காட்சிகள். கொழும்புத் துறைமுகம், உணவு இலாக்கா, சர்வகலாசாலை, போட்டி விளையாட்டுகள், இலங்கையில் நடைபெறும் கலியாணக்காட்சிகள், வைத்திய இலாக்கா, களஞ்சியசாலை சுகாதாரப் பயிற்சி, முதலிய காட்சிகளை எல்லாம் அவர் சினிமாப்படம்பிடித்திருக்கிறார். இப்படம் எப்ரல் மாதம் லண்டனிலும் மேமாதம் இலங்கையிலும் திரையிடப்படும்.

கொழும்பு, டிச. 14

திரு ஐ. எக்ஸ். பெரேராவுக்கு பரிசுத்த பாப்பரசர், "நைட் கமாண்டர் ஆப் தி ஆர்டர் ஆல் செயின்ட் சில்வெஸ்டர்" என்ற பட்டம் அளித்திருப்பதாக கொழும்பு அதிமேற்றிராணியாருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

சர்வகலாசாலைக் கல்வி அரைகுறைப் படிப்பே!

கலைஞான முள்ளவனே பூரண கல்விமான்

நுண்கலைகளான சங்கீதம், நாடகம், சித்திரம், பேச்சுவன்மை, ஹாஸ்யம், நளினம், சுழகம், தேகப்பயிற்சி, மனஅடக்கம் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெறவேண்டும்

கொழும்பு டிச 14

இலங்கை சர்வகலாசாலை உப அதிபட்சகர் டாக்டர். ஜென்னிங்ஸ் வத்தளையில் நேற்று நடைபெற்ற செயின்ட் அந்தோனி கல்லூரி பரிசளிப்பு, கலைக்காட்சி விழாவில் பேசியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இலங்கைப் பிரதம மந்திரியாவதற்கோ, பிரதம நீதிபதியாவதற்கோ, அல்லது பெரிய சக்திரவைத்தின், ஒரு உப அதிபட்சகர் அல்லது நிரந்தரக் காரியதரிசி ஆவதற்கோ வேண்டிய விஷய ஞானங்களை யெல்லாம் ஒரு பள்ளிக்கூடம் ஒரு மாணவனுக்கு போதித்துவிட முடியாது. ஒருமனிதன் தன் தொழிலில் வெற்றிபெறவது அவனது பண்புகளை பொறுத்திருக்கிறது. அப்பண்புகளில் சிலவற்றை தான் பரீட்சைகளில்சோதித்தறிய முடியும். சர்வகலாசாலைப் பட்டம்பெற்ற ஒருமாணவன் அரைகுறையாகப் படித்தவனுக்கே கருதப்படுவான். ஒரு கதை யெழுதுவது, நான்கு பேர்கள் கூடியிருக்கும்போது அவர்களுக்குக் குதூகலமுண்டாகும்படியாகவும், வசீகரமாகப் பேசுவது, சித்திரம் வரைவது, ஒரு சங்கீதவாத்தியம் வாசிப்பது, அல்லது சங்கீதத்தை கேட்டாவது ரசிப்பது, சங்கீதம் பாடுவது, நாடகத்தில் நடிப்பது. சாதாரணமாகவாவது ஓர் போட்டி விளையாட்டு விளையாடுவது, அறிவு பிரதிபலிக்கும்படியாக சம்பாஷிப்பது, தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வது, முதலிய பல விஷயங்களில் அவனுக்கு ஞானம் இருந்தால்தான் அவன் பூரணமான கல்விமானாகக் கருதப்படுவான். இவ்விதம்பூரணக் கல்விக்கு ஒரு கலாசாலை மாணவனுக்கு அந்திவாரத்தை மட்டுமே போட்டுக் கொடுக்க முடியும். நமது இலவசக் கல்விமுறை போதுமானதாக இல்லை என்பதற்கு இது ஒரு காரணம். இவ்விதக்கல்வி அம்சங்களைப்பெற யாராவது பணம் செலவழித்து வசதியளிக்க வேண்டும். அரசாங்கமோ அல்லது தர்மிஷ்டர்களோ இவ்வசதிகளை அளிக்காவிடில் பெற்றோர்களாவது தங்கள் குழந்தைகளுக்கு இவ்வித கலைஞானத்தைப் புகட்ட வேண்டும். இவ்வசதிகளை அளிக்க பணம் படைத்த தர்மிஷ்டர்களும் முன்வரவேண்டும். அநேக பள்ளிக்கூடங்கள் இவ்வித வசதியளிப்பதில் கவனம் செலுத்துவதைவிட பற்பல பரிசுகளை வழங்குவதிலேயே அக்கறை கொண்டிருக்கின்றன. 10 பரிசுகள் வழங்குவதைவிட ஒரு புஸ்தகத்தை கலலூரி நூலகிலயத்தில சேர்த்துவைப்பது மிகவும்பயன்தரும். படப் பரீட்சைகளுக்கு சர்வகலாசாலையில் பயிலும் மாணவர்களிடையே, தேகப்பயிற்சியும் மனோ ஊக்கமும் குதூகலமும் அளிக்கும் விளையாட்டுகளில் ஈடுபடும் மனப்பான்மையையும், இனங்களோடு அளவளாவி சுமுகமாகப் பழகும் நளின சுபாவத்தையும், மற்றும் கலாச்சாரப் பண்புகளையும் உண்டாக்க நான் அரும்பாடுபடுகிறேன். அவர்கள் நல்லமாணவர்களாதலால் அவர்களுக்கு இப்பயிற்சி அளித்துவிட்டால் அது எங்கும் பரவும். துரதிருஷ்ட வசமாக நாம் சில பரம்பரையான சுபாவங்களைப் பெற்றிருக்கிறோம். பரீட்சையில் தேற படிப்பிலேயே மட்டும் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டுமென்றுமவேறெதிலும் கவனம் செலுத்தக் கூடாதென்றும பெற்றோர்கள் கருதுகிறார்கள். இது நல்லதல்ல பள்ளிக்கூடப் பாடங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் அறிவையும் திறமையையும், ஊக்கத்தையும் கலாச்சாரத்தையும் அபிவிருத்தி செய்யும் இதர அலுவல்களிலும் ஈடுபட வேண்டும் எனது கலாசாலையில் ஒவ்வொரு மாணவனும் பள்ளிக்கூட போட்டி விளையாட்டுக் கோஷ்டியிலோ அல்லது பந்தயப்படகு கோஷ்டியிலோ சேர்ந்திருக்கிறான். மற்றும் அறிவையும் குணத்தையும் தேகநலத்தையும் அபிவிருத்தி செய்யும் இதர அலுவல்களிலும் ஈடுபட்டிருக்கிறான்.

வெள்ளைத் திமிர் ஒழியவேண்டும்

அகில முஸ்லிம் யூனியன் தலைவர் கருத்து

எகிப்திலிருந்து ஆஸ்திரேலியா செல்கிறார்

கொழும்பு, டிச. 14

ஆஸ்திரேலியாவில் குடியேற பால்கன் நாடுகளைச் சேர்ந்த 800 வெள்ளையர்களை ஏற்றிச் செல்லும் எகிப்திய கப்பலான 'மிஸ்ரா' வில் அகில முஸ்லிம் யூனியன் தலைவர் டாக்டர் தாலத் தாஹா ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன் நகருக்கு கொழும்பு மார்க்கமாகச் செல்கிறார். அங்குள்ள முஸ்லிம்களுக்காக யூனியன் கிளையொன்றை மெல்போர்ன் நகரில் நிறுவுவதற்காக அவர் செல்கிறார். இலங்கையிலும் ஒரு கிளையை ஏற்படுத்துவது பற்றி அவர் தொழில மந்திரி திரு டி பி ஜாயாவைச் சந்தித்துப் பேசுவார்.

இந்தியா, சைனா, ஜப்பான், இந்தோனேஷியா, எகிப்து முதலிய நாடுகளில் மிதமிஞ்சி ஜனத் தொகை பெருகியுள்ளதால், இந்நாடுகளிலுள்ளவர்கள் ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய நாடுகளில் குடியேற அனுமதியளிக்கவேண்டுமென்றும், அனுமதியளிக்காமல் அவைகள் வெள்ளையர் மட்டுமே குடியேற வேண்டுமென்ற துவேஷக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாயின் உலகில் அமைதி ஏற்படப்போவதில்லையென்று அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 C, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3611.

செவ்வாய்க்கிழமை மார்கழி மீ 16
செவ்வாய்க்கிழமை

இரும்பு எல்லை தகர்க்கப்பட்டது

மாஸ்கோவில், பிரிட்டிஷ்-ரஷிய வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுளளது. இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே ஒரு விசேஷித்த அபிவிருத்தியை வெளிப்படுத்துகின்றது. சென்ற ஜூலை மாசத்தில் இவர்களுக்கிடையே நடந்த வர்த்தக ஒப்பந்தப் பேச்சுக்கள் மயிரிடை வித்தியாசத்தால் முறிந்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். அப்பொழுது இன்ன இன்னபண்டங்கள் ஒருவருக்கு ஒருவர் கொடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அவற்றின் விலைவாசிகளும், கொடுக்கும் தேதிகளும் குறிப்பிடப்பட்ட ஒரு நகல் ஒப்பந்தம் தயாரிக்கப்படடிருந்தது. ஆயின் 1941-ம் ஆண்டில் பிரிட்டிஷார், ரஷியாவுக்குக் கொடுத்த கடன்களைத் திரும்பக் கொடுப்பதில் சிறிது விக்தியாசம் ஏற்பட்டபடியால் நகல் ஒப்பந்தம் மறுக்கப்பட்டது. ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், பிரிட்டிஷார் நூற்றுக்கு அறுபது பங்கு ரஷிய வேண்டுகோளுக்கு விட்டுக்கொடுத்ததுள்ளார்களென்றும் அதற்கு மேல் தாம் செல்ல முடியாதென்றும் கூறினார். அக்காலந் தொடக்கம் பிரிட்டன் தங்கள் அந்நியச் செலாவணியிலிருந்தும், தங்க நிலுவையிலிருந்தும் பெருந்தொகைப் பணத்தை எடுத்துள்ளது ஐக்கிய அமெரிக்காவும் போதிய பணவசதியை பிரிட்டனுக்கு அளிக்கவில்லை பிரிட்டனுக்கு தானிய வகைகளும், பரவகைகளும், மாட்டுப் பால், நெய், வெண்ணெய் முதலியனவும் அதிகம் வேண்டும். வேற தேசங்களிலும் பார்க்க மலிவாக இப்பொருட்களை பிரிட்டனுக்குக் கொடுக்கக்கூடிய தேசம் ரஷியாதான். ஆகவே பிரிட்டனில் உள்ள டாலர் நெருக்கடியும், உணவுப் பஞ்சமும் தான் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முக்கியமாக உதவி அளித்துள்ளன. இன்னும் ரஷ்ய ஒப்பந்தம், கானடா, ஐக்கிய அமெரிக்கா, ஆர்ஜென்டைனா முதலிய தேசங்களிடமிருந்து பிரிட்டனுக்குச் சாதகமான வர்த்தக நிபந்தனைகள் கிடைப்பதற்கும் வழி கோலியுள்ளது.

இதன் பேரான ஒரு விசேஷ அம்சமும் உண்டு. ஐரோப்பாவுக்கு உதவி செய்ய அமெரிக்காவால் புகுத்தப்பட்ட இடைக்காலத் திட்டத்தில் பிரிட்டன் சேர்க்கப்படவில்லை குடியரசுக்காரர்களின் ஆதிக்கமுள்ள அமெரிக்கன் காங்கிரஸில் மார்ஷல் திட்டத்திற்குப் பலத்த எதிர்ப்புமிருக்கிறது. இந்த நிலைமையில் பிரிட்டனின் கூலுலத் தலைவரும், பொருளாதார மந்திரியுமாகிய ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வாழாவிருக்க முடியாது. பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் திருமுரோமனைத் தலைவராகக் கொண்ட இடதுசாரிக் கட்சியினர், ரஷியாவுடன் ஒரு நீடைகால பொருளாதார ஒப்பந்தத்தையும், நகலெண்ணத்தையும் ஏற்படுத்திக்கொள்ளும்படி பிடிவாதமாக இருந்தார்கள் இந்தக் கட்சியினரால் ஆதரிக்கப்பட்ட கொள்கையின் வெற்றிச் சின்னமே இந்த பிரிட்டிஷ்-ரஷிய ஒப்பந்தமாகும். ஐரோப்பாவை சிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே இரண்டாகப் பிரிக்கும் அபாயத்தற்கும் ஏற்படி ஒப்பந்தம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. பொருளாதார ரீதியில் ஏற்பட்டிருந்த இரும்பு எல்லை தகர்க்கப்பட்டுவிட்டது. அத்துடன் பிரிட்டன் இப்பொழுது யூகோஸ்லாவியாவுடன், ரஷிய ஒப்பந்தம் போன்ற ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைந்துளளதெனச் செய்திகள் வெளிவருகின்றன ஆகவே ரஷியாவுக்கும் மேற்கு ஐரோப்பாவிற்குமிடையே பரஸ்பர உதவி அளிப்பதான அம்ஸமுடைய ஒரு புதிய கொள்கையை ஸர். கிரிப்ஸ் கெதியில் வெளியிடக்கூடுமென நாம் எதிர்பார்க்கலாம்.

இலங்கை-இந்தியப் பிரச்னை பற்றி திரு வி. வி. கிரி

மலையாள மகாஜன சபையில் பேச்சு

கொழும்பு, டிச. 16

நேற்று முன்தினம் கொழும்பு நகர மண்டபத்தில் இலங்கை மலையாளி மகாஜன சபையின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தைத் திறந்து வைத்த இந்திய அரசாங்கத்தின் இலங்கை ஸைகமிஷனர் திரு வி வி கிரி பின்வருமாறு கூறினார்:-

பண்டித நேரு மகாத்மா காந்தி முதலியோர் இலங்கை-இந்தியர், இலங்கையைத் தமது நிரந்தர வாசஸ்தலமாக்குவதற்கு முன் வந்தால் அதிகமான பிரச்னைகளைத் தீர்த்துக்கட்டி விடலாம் எனக் கூறியுள்ளனர். இலங்கையில் உள்ள ஒவ்வொரு இந்தியனும் "நான் இலங்கையன்" என்று கூறுவதில் பெருமையடையவேண்டும். "இங்கு வாழ்ந்து இங்கு மடிந்து இந்நாட்டைத் தனது வாசஸ்தலமாக்கவேண்டும்."

இந்தியா-இலங்கை உறவு சம்பந்தமாக சில கஷ்டங்கள் முன்னிருந்தன. ஆனால் சுதந்திரம் வழங்கப்பட்டதோடு இப்பிரச்னைகள் தீர்ந்துவிட்டன இரு பெரும் அரசியல் தலைவர்களான இந்தியப் பிரதமர், இலங்கைப் பிரதமர் ஆகியோர் இது சம்பந்தமாகச் சீக்கிரம் சம்பாஷிப்பார்கள். இன்று இந்தியா, இலங்கைத் தேச மக்கள் என்ற ரீதியில் அல்ல ஆனால் ஆசிய மக்கள் என்ற ரீதியிலேயே எண்ணங்கள் வளர்கின்றன. உலகப் பிரஜைகளாக வாழ்வதற்கும் இன்றைமன விரிவு இடங்கொடுக்கும்.

ஆகவே ஒரு ஆசிய சமஷ்டி அரசாங்கத்தைப்பற்றி இலங்கையின் சிறந்த தேச பக்தரின் ஒருவரான திரு ஜே எல் கொத்தலாவலை, சென்னையில் பேசியதை வாசித்தபோது நான் மிகுந்த ஆனந்தமடைந்தேன் இலங்கை இந்தியப் பிரச்னை தீர்க்கப்படுவது இரண்டு நாடுகளின் முன்னேற்றத்திற்கு அவசியம். தொழில்வியாபாரப் பிரச்னைகளுக்கு முன் வாக்குரிமைப் பிரச்னையை தீர்க்கப்பட வேண்டும்.

மலையாள மகாஜன சபையின் புது வருட உத்தியோகஸ்தர் ஜாபிதா பின்வருமாறு:-

தலைவர் ஸி. கே. குஞ்சுராமன், உபதலைவர்கள் ஏ. கே நாயர், ஸ்ரீயதி ஸி. ஸி. ஐ. ஆபிரகாம், பொதுக் காரியதரிசி வி. என். குஞ்சுராமன், உதவிக் காரியதரிசி ஸி. வி. வேலாயுதன், பொக்கிஷதார் கே. கே வேலாயுதன், ஸ்தாபனக் காரியதரிசி வி. வி. சங்கர்.

கிராமங்களுக்கோர் முன்மாதிரி

தல்வத்தையில் கட்டுறவுக் காய்கறிப் பண்ணை

கொழும்பு, டிச. 16

அலவாக்குச் சமீபம் உள்ள தல்வத்தைக் கிராமத்தை இலங்கையின் மாதிரிக் கிராமமாக்குவதற்காக அரசாங்கம் தீர்மானித்துச் செயலாற்றி வருகிறது. அங்கு புதிதாகக் கூட்டுறவு ரீதியில் 10 ஏக்கர் நிலத்தில் காய்கறிகளைப் பயிர் செய்வதென இப்போதுமுடிவு செய்யப்படடுளளது. இக் கூட்டுறவுக் காய்கறி மாதிரிப் பண்ணை அடுத்துளள கிராமங்களில இதே போன்ற முயற்சிகளைக் கிராமவாசிகள் மேற்கொள்வதற்குத் தூண்டுதலாக விளங்கும் என நம்பப்படுகிறது.

பெப்ரவரியில் சுதந்திர விழாக் கொண்டாடடதின் போது தல்வத்தை மாதிரிக் கிராமம் சிறப்பாகத் திறந்து வைக்கப்படும் எனத் தெரிகிறது.

வால் நக்ஷத்திரம்

கொடைக்கானல், டிச 18

நேற்று மாலை 7 மணிக்கு ஆவானதில் தென் மேற்கு திசையில் வால் நக்ஷத்திரம் தோந்ததாக கொடைக்கானல் ஆபஸர்வேடரி அறிவிக்கிறது.

அதே நேரத்தில் அதே திசையில் தாமும் கண்டதாக பம்பாயிலிருந்து ஒருவர் தெரிவிக்கிறார்.

கராச்சிமீது ரஷியாவின் கண்

சென்னை அரசாங்க ஊழியர் கமிஷன்

ஆங்கிலேயருக்குப் பதில் தமிழர் தலைவர்

சென்னை, டிச. 14

அரசாங்க ஊழியர் தலைவர் ஸர் ஸி. ஸி. பின் 1948 ஜனவரி 31வ முதல் ஒரு மாதம் 19 நாள் ரஜாவில் செல்வார். ரஜா முடிந்தவுடன் அவர் தம் பதவியை ராஜிநாமாச் செய்வார்.

இப்பொழுது மெம்பராக இருக்கும் திரு டி. எம் நாராயண சுவாமிபிள்ளை ஜனவரி 31வ முதல் 6 வருஷ காலம் கமிஷன் தலைவராக நியமிக்கப்படுவார். இப்பொழுது கமிஷனின் தற்காலிக மெம்பராக இருக்கும் ஸ்ரீ பி. கே. ஞானஸ்கந்தர் முதலியார் ஜனவரி 31வ முதல் 6 வருஷம் மெம்பராக இருப்பார்.

கீழ் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளங்கள்

நெற்பயிருக்கு சேதம் இல்லையாம்

கொழும்பு, டிச. 16

கீழ்மாகாணத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளங்களின் காரணமாக நெற்பயிருக்கு மிகுந்த சேதம் விளையும் என நம்பப்பட்டது. ஆனால் உள்நாட்டுக் கொள்முதல் திட்ட உத்தியோகஸ்தர்களின் கூற்றுப் பிரகாரம் அவ்வித சேதம் எதவும் ஏற்படவில்லை என்றும், உண்மையில் ஒரு கடுமையான வரட்சி ஏற்படுவது இவ்வெள்ளத்தினால் தடைசெய்யப்பட்டிருக்கிறது எனவும் தெரிகிறது.

லண்டனிலிருந்து திரும்பும் ஆப்கன் பிரதமர், ஜனாப் ஜின்னாவையும், பண்டித நேருவையும் சந்திப்பார்

சுதந்திர பட்டாணிஸ்தான் இயக்கம் பற்றி பிரிட்டன் கவலை

இலங்கை உட்பட தென்கிழக்கு ஆசிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு

லண்டன், டிச. 14

ஆப்கானிஸதான்-பாகிஸதான் எல்லைப்புறத்திலுளள நிலைமையைப்பற்றி ஆப்கன் பிரதம மந்திரி முகமதுஷாகான் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லியையும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி பெவினையும் சந்தித்துப் பேசிவிடு நேற்று லண்டனிலிருந்து காபூலுக்குத் திரும்பினார். அவர் சுதந்திர பட்டாணிஸதான்பற்றி கலந்து பேசியதாகத் தெரிகிறது. திரும்பும் மார்க்கத்தில் ஆப்கன் பிரதம மந்திரி கராச்சியில் பாகிஸதான் பிரதம மந்திரியையும் டில்லியில் இந்தியா பிரதம மந்திரியையும் சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

சுதந்திர பட்டாணிஸதான் இயக்கதை பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி ஆதரிப்பதாகத் தெரியவில்லை. ஆப்கானிஸதான்-பாகிஸதான் எல்லைப்புற நிலைமையில் பிரிட்டன் கவனம் செலுத்தி வருகிறது. இது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் பாகிஸதான் பிரதம மந்திரியையும் இந்திய பிரதம மந்திரியையும் கலந்து பேசுவார்கள்.

ஆப்கானிஸதானம் ரஷியாவுக்கு அதிக சலுகைகள் காட்டி வருகிறது சமீபத்தில் வடக்கு ஆப்கானிஸதானத்தில் ஒரு சிறிய விமான நிலையம் கட்டுவதற்கு ஒரு அமெரிக்க கம்பெனிக்கு அனுமதியளிக்க ஆப்கன் சர்க்கார் மறுத்துவிட்டார்கள் ஆகவே ஆப்கானிஸ்தானத்திற்கும் ரஷியாவுக்கும் ஏற்பட்டுள்ள உறவைக் குறித்து பிரிட்டனில் உட்கருத்தை அறியவே ஆப்கன் பிரதம மந்திரி லண்டன் விஜயத்தின் முக்கிய நோக்கமென்று சொல்லப்படுகிறது.

கராச்சி மீது ரஷியாவின் கண்

ஆப்கானிஸதான் பிரிட்டிஷ் ஸதானிகராக இருந்த லெப்டினென்ட் கர்னல் ஸர் பிரேசர் டைட்லர் லண்டனில் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:-

ஆப்கானிஸதானத்திற்கும் பாகிஸதானுக்கிடையேயுள்ள எல்லையில் தகராறு முற்றிவிட்டால், ரஷிய ஆக்கிரமிப்புக்கு இடம் ஏற்படும் ரஷியா கராச்சி மீது கண் வைத்துக் கொண்டிருக்கிறது.

தென்கிழக்கு ஆசிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம்

லண்டன், டிச. 14

பிரிட்டனின் சம்மதத்தோடு கூட இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை ஆகிய நாடுகள் சேர்ந்து தென்கிழக்கு ஆசியக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமொன்று கூடிய சீக்கிரம் செய்து கொள்ளுமென்று தெரிகிறது. இதுசம்பந்தமாக லார்டு மவுண்ட் பேட்டன் பண்டித நேருவுடன் கலந்து ஆலோசனை செய்து வருகிறார். லார்டு மவுண்ட்பேட்டன் சமீபத்தில் லண்டனுக்கு விஜயம் செய்திருந்த போது பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லியையும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி பெவினையும் சந்தித்து இதுபற்றிக்கலந்து ஆலோசனைசெய்தார்.

இந்தக் கூட்டு பாதுகாப்பு ஒப்பந்ததில் பிர்னர் மலேயாவையும் ஆஸ்திரேலியாவையும் சேர்த்துக்கொள்வது பற்றியும் பேச்சுகள் நடைபெறுகின்றன

அப்படிப்பட்ட ஒப்பந்தமொன்று பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லையென்றும் ஆனால், அப்படிப் பட்ட ஒப்பந்தம் உலகிலுள்ள எந்த வல்லரசுக்கும் விரோதமாக இருக்கலாகாதென்றும், முக்கியமாக ரஷியாவுக்கும் சைனாவுக்கும் விரோதமாக இருக்கலாகாதென்றும் பண்டிதநேரு தெரிவித்ததாகத் தெரிகிறது.

இதற்கிடையே பண்டிதநேரு புதுவருடத்தில் லண்டன் செல்லக்கூடுமென்றும் அப்பொழுது இந்தியா-பிரிட்டன் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அவர் பிரிட்டிஷ் பிரதமருடன் கலந்து பேசும்போது, இந்தக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம்பற்றியும் பேச்சு நடைபெறுமென்று தெரிகிறது.

இந்திய பாராளுமன்றத்தின் இணையற்ற வெற்றி

21 கூட்டங்களில் மின்னல் வேகத்தில் 23 மசோதாக்கள் நிறைவேறின

வெட்டிப்பேச்சுகள் வம்பளப்புகள் இல்லை

காங்கிரஸ் கட்சியின் பிரமிக்கத்தக்க கட்டுப்பாடு

புதுடில்லி, டிச. 15

இந்திய பார்லிமெண்டு புதுடில்லியில் மிக வெற்றிகரமாக நடந்தது. ஒரு கண்டனத தீர்மானம் இல்லை; சபையை ஒதுதிவைக்கும்படி அவசரத தீர்மானமு எதுவும் நிறைவேறவில்லை சாதக பாதகமாகப் பிரிந்து வோட்டு எடுக்கும்படி "பிரால்" கேட்கப்படவில்லை. இதுதான் இந்திய பார்லிமெண்டு முதல் கூட்டத்தின் மகத்தான வெற்றியாகும்.

காங்கிரஸ் கட்டுப்பாடு

இந்த வெற்றிக்குக் காரணம் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களிடையே காணப்படும், பெரிதகக்க கட்டுப்பாடேயாகும் மற்றொரு காரணம், எதிர்க்கட்சிஎன்ற ஒன்று திறமையாக இலலாநருபபதாகும்.

விவாதத்துக்குரிய அம்சங்கள், முக்கிய திருததங்கள் ஆகியவைகள் எலலாம் காங்கிரஸ் கட்சியார் தங்கள் கட்சிக் கூட்டங்களிலேயே விரிவாக ஆராய்ந்து, எப்படி நடக்க வேண்டும் என்பதை முடிவு செய்து விடுகிறபடியால், எதிர்ப்போ, மாறுபட்ட கருததுக்களோ பார்லிமெண்டு மேடையில் நீண்ட நேரத்தை விழுங்குவதில்லை காங்கிரஸ் கட்சியின் முடிவுப்படி அங்கத்தினர்கள் கண்டிப்பாக நடந்து கொள்கிறார்கள். பேச்சும் ரததினச் சுருக்கமாக இருக்கிறது.

காங்கிரஸை எதிர்ப்பவர்கள் தனிக் கட்சியாக நின்று வேலை செய்வதில்லை. அவர்கள் ஒன்று சேருவதில்லை. சேரவும் முடியாது. சீக்கிரத்தில எதிர்க்கட்சி ஒன்று அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கவும் இடமில்லை.

முஸ்லிம் லீகர்கள்

முஸ்லிம் லீகர்கள் அ.நி சபையில் சொற் போர்கள் நடத்தியது போல் இந்திய பார்லிமெண்டில பேசவில்லை.

காங்கிரஸை எதிர்க்கவோ எதிர்க்கட்சியாக நின்று வேலை செய்யவோ லீகர்கள் இஷ்டபடவில்லை.

அவர்கள் தன்னடக்கத்துடனும் சமயோசித புத்தியுடனும் நடந்து கொள்கிறார்கள்.

23 மசோதாக்கள்

இந்தப் பார்லிமெண்டில் 21 கூட்டங்கள நடந்திருக்கின்றன இவைகளில் 23 மசோதாக்கள் நிறைவேறியிருக்கின்றன. தினசரி ஒரு மசோதா நிறைவேறுவதென்பது மிக ஆச்சரியப்படவேண்டிய விஷயமாகும்.

இப்படிப்பட்ட மின்னல் வேகத்தில் அபார வேலை நடந்திருப்பதற்கு காங்கிரஸ் மெம்பர்களின் கட்டுப்பாடுதான் பிரதம காரணமாகும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் மிகச் சுருக்கமாகவும், அவசியமில்லாதபொழுது பிரசங்கமாரி பொழிவதை நிறுத்திக்கொண்டும் நடந்துகொள்கிறார்கள்.

ஆனால் முஸ்லிம் லீகர்களில் திறமையாகப் பேசி எதிர்ப்பவர்கள் இல்லை.

பொதுஜன உற்சாகமும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. பழைய சட்டசபைக் கூட்டங்களுக்கு ஏராளமாகப் பொதுஜனங்கள் வருவதில்லை. டில்லி அ. நி. சபையைக்காட்டிலும் அதிக எண்ணிக்கை, இந்திய பார்லிமெண்ட நடவடிக்கைகளை கவனிக்க வந்தனர். சுமார் 6000 மக்களுக்கு மேல் 21 கூட்டங்களுக்குத் தொடர்ந்து வந்திருக்கிறார்களாம் ஆனால், இது பாராட்டத்தக்க விஷயமாகும். பார்லிமெண்டு கூட்டங்களின் காலரிகள இப்பொழுது நிறைந்திருந்ததுபோல இதற்கு முன் எப்பொழுதுமே நிறைந்திருக்கவில்லை.

இந்தியா - ஜெர்மனி வர்த்தக ஒப்பந்தம்

விஞ்ஞான கருவிகள் இறக்குமதிக்கு ஏற்பாடு

இந்தியாவுடன் வர்த்தக உறவுக்கு ஜெர்மன் ஆவல்

பெர்லின், டிச. 14

யுத்தம் முடிந்த பின்பு முதன் முறையாக இந்தியாவுக்கும் ஜெர்மனிக்குமிடையே இரு வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

விஞ்ஞானக் கருவிகள், ரசாயன சாமான்கள், போட்டோ சாமான்கள் விவசாய யந்திரங்கள் முதலியவைகளை (சில ஆயிரம் பவுன் சாமான்கள்) ஜெர்மனி ஏற்றுமதி செய்யும். இந்தியாவுடன் வர்த்தக உறவு ஏற்படுத்திக் கொள்வதில் ஜெர்மனி வர்த்தகர்கள் ரொம்ப உற்சாகம் காட்டுகிறார்கள். இந்தியாவிலிருந்து பருத்தியைத் தவிர்த்து பதனிடப்படாத தோல்கள், மைக்கா, எண்ணெய் விதைகள் முதலியவைகளை ஜெர்மனி எதிர்பார்க்கிறது. இந்திய புகையிலையையும் ஜெர்மனியர் விரும்புகின்றனர்.

ஜெர்மனியில் பிரிட்டிஷ் வசமுள்ள பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்த இந்தியராஜதூதுகோஷ்டியின் பொருளாதார ஆலோசகர் ஸ்ரீ கே. வி. ராமசாமி மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- "இந்தியப் பருத்தி வருவதில் உள்ள இடைஞ்சல்களை நீக்குமாறு ஜெர்மனியர்களை கேட்டனர் ஏற்கனவே ஜெர்மனியில் இந்திய வர்த்தகப் பிரதிநிதிகள் பலர் இருக்கிறார்கள் கூட்டு ஏற்றுமதி இறக்குமதி ஏஜன்ஸி மூலமாகக்கான் தற்போது இந்தியாவுக்கும் ஜெர்மனிக்குமிடையே வர்த்தகம் நடைபெற வேண்டும்."

பாரசீக அரசியல் நெருக்கடி

அரசாங்க கட்சி பத்திரிகாலயத்தை எதிர் கட்சியார் கைப்பற்றினர்

பாராளுமன்ற அரசாங்க கட்சி பிரதிநிதிகள் நாக்கப்பட்டனர்

டெஹ்ரான், டிச. 14

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியும் பிரதம மந்திரி பதவியை ராஜிநாமா செய்யாதிருக்கும் பாரசீக மாஜி பிரதம மந்திரி கவாம் கல்தானுக்கு எதிர்க்கட்சியாகிய ஜாதியக் கட்சியின் மற்றும் சிலரும், அக் கட்சிப் பத்திரிகையாளரையும் அக்கக்கத் தோலையும் எதிர்க்கட்சியினர் கைப்பற்றினர். இந்த வன்செயல் சம்பவம் நிகழ்ந்தது. நேற்றிரவு கவாம் கல்தானுக்கு ஆதரிக்கும் பாராளுமன்ற அரசாங்க கட்சி அங்கத்தினர் இருவரை எதிர்க் கட்சியார் தாக்கினார்கள். (ராய்ட்டர்)

லார்டு பால்டுவின் காலமானார்

பிரிட்டனின் மாஜி பிரதம மந்திரி

ஸ்டூர்போர்ட், டிச. 14

நேற்றிரவு பிரிட்டனின் மாஜி பிரதம மந்திரி லார்டு பால்டுவின் தனது இல்லத்தில் படுத்து நித்திரை செய்துகொண்டிருக்கும்போது காலமானார். அவருக்கு வயது 80, அமெரிக்க காதலிக்காக 8 வது எட்வர்ட் மன்னர் (இப்பொழுது விண்சர் கோமகன்) பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிம்மாசனத்தை துறந்தபோது 1936 வது வருடம் இவர் பிரதம மந்திரியாக இருந்தார். 1928 வது வருடம் நடைபெற்ற பொதுவேலை நிறுத்த நெருக்கடியின்போதும் பிரதம மந்திரியாக இருந்தார்.

இவர் 41-வது வயதில் அரசியலை பிரவேசித்த 21 வருட காலம் பாராளுமன்றத்தில் கன்சர்வேடிவ் கட்சி பிரதிநிதியாக இருக்கையில் 12 வருட காலம் பிரதம மந்திரி பதவியை வகித்தார் (ராய்ட்டர்)

பாலஸ்தீனம்

பிரிட்டிஷ் ஆயுத சாலையை யூதர்கள் தாக்கினர்

மன்னர் அப்துல்லா துருப்புகளுக்கும் யூதர்களுக்கும் சண்டை

ஒரு லட்சம் எகிப்தியர்கள் கூட்டத்தில் அராபிய பிரதம மந்திரிகளின் பிரசங்கங்கள்

கெய்ரோ, டிச. 14

நாராக்கின் சௌட் சபைத் தலைவர் ஜெனரல் நூரி பாஷா நேற்றிரவு நடைபெற்ற அராபிய லீக் கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொண்டார் கூட்டம் முடிந்ததும் அராபிய லீக் காரியதரிசி அசாம் பாஷா பின்வருமாறு தெரிவித்தார்:-

ஜெனரல் நூரியின் அறிக்கையை நாங்கள் எல்லோரும் கேட்டோம், அவரது அபிப்பிராயங்களை நாங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வோம் நாங்கள் உயிருடனிருக்கும்வரை பாலஸ்தீனத்தில் யூதர் நாடு உயிருடனிருக்க முடியாது. நாளை லீக் மீண்டும் கூடும்.

லெபானன் எல்லைப்புற சம்பவங்கள்

ஜெருசலேம், டிச. 14

பாலஸ்தீன போலீஸ் அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது:-

பாலஸ்தீன - லெபானன் எல்லைப்புறங்களில் பல சம்பவங்கள் நடைபெற்றதால், பாலஸ்தீனத்திலிருந்து லெபானன் எல்லைப்புறத்தில் அதது மீறி பிரவேசிப்பவர்களை உடனே கட்டுத தள்ளும்படி லெபானன் சர்க்கார் எல்லைப்புறத்திலுள்ள லெபானன் துருப்புகளுக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள.

10 அராபியர் மாண்டனர்

அராபிய துறைமுகப்பட்டினமான ஜாபா நகருக்கு தெற்கேயுளள தெல் அரிஷ் என்ற கிராமத்தை யூதப் படைகள தாக்கி 10 அராபியர்களைக் கொன்றனர்.

12 யூதர்கள் கொல்லப்பட்டனர்

பாலஸ்தீனத்தில காவல் புரியும்டிராஸைஹார்டான்மன்னர் அப்துல்லாவின் அராபிய துருப்புகளுக்கும் யூதர்களுக்குமிடையே வி—டா நகருக்குக் கிழக்கே பென்ஷெமன் என்னுமிடத்தில் ஏற்பட்ட சச்சரவில 12 யூதர்கள் கொல்லப்பட்டனர். 10 யூதர்கள் காயமடைந்தனர்.

அராபிய நகரான ரம்லேயில் ஆயுதங்களுடன் வந்த அராபியர்கள போலீஸ் ஆயுதச் சாலையைத் தாக்கி பிரிட்டிஷ் காவலாளியைக் காயப்படுத்தி 300 யந்திரத் துப்பாக்கிகளையும் 60000 தடவை சுடக்கூடிய வெடிமருந்துகளையும் நேற்றிரவு கொள்ளையடித்துச் சென்றனர். பிரிட்டிஷ் காவலாளிகளுக்கும் அராபியர்களுக்கு மிடையேதுப்பாக்கிச்சண்டையும் நடைபெற்றது. அதில் 20 அராபியர்கள் கொல்லப்பட்டனர்.

பாலஸ்தீனப் பிரிவினைக் கலகம் ஆரம்பமானது முதல் இதுவரை 84 யூதர்களும் 88 அராபியர்களும் 7 பிரிட்டிஷ் துருப்புகளும் 5 பாலஸ்தீன போலீஸாரும் 1 ஆர்மீனியரு கொல்லப்பட்டனர்.

கெய்ரோவில் பொதுக் கூட்டம்

கெய்ரோ, டிச. 14

அராபிய லீக் கவுன்ஸில் கூட்டத்திற்கு இக்கு வந்திருக்கும் அராபிய நாடுகளின் பிரதம மந்திரிகள் பாலஸ்தீனப் பிரச்னையை எதிர்த்துச் செய்த பிரசங்கங்களைக் கேட்பதற்கு ஒரு லட்சம் ஜனங்கள் அடங்கிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. எகிப்திலேயே இதுவரை நிகழ்ந்திராத அவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயபுரியில் லார்டு மவுண்ட் பேட்டன் ஜெயபேரிகை

ஐக்கிய இந்தியாவே அனைவருக்கும் நலன்பயக்கும்

பண்டித நேருவை பிரிட்டனில் வரவேற்க பிரிட்டிஷ் சர்க்கார் ஆவல்

ஹைதராபாத்தில் வரிகொடா இயக்கம்

ஜெயபுரி, டிச. 14

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் ஜெயபுரி சமஸ்தான விருந்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- ஐக்கிய இந்தியாவில் நான் பலமான நம்பிக்கையுடையவன், சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேருவதால் சமஸ்தானங்களுக்கும் நன்மையுண்டு, இந்தியயூனியனுக்கும் நன்மையுண்டு என்று நான் நிச்சயமான கருத்துடையவன். அநேகமாக எல்லா சமஸ்தானங்களும் இந்திய யூனியனில் சேர முடிவு செய்திருப்பது பற்றி நான் அகமகிழ்ச்சியுறுகிறேன். இந்த சமஸ்தானங்களின் முடிவுகளை இந்திய யூனியன் சர்க்கார் பெரிதுபாராட்டுகிறார்கள் என்பதை சமஸ்தான மன்னர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வித ஐக்கியத்தால் உறுதியான நிலைமை ஏற்படும். அந்நியர் ராஜ்ய புதன சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேருவதால் அதிக பலமும் உண்டாகும். ராஜ்ய புதன சமஸ்தானங்கள் இந்தியாவில் முக்கியமான பகுதியிலிருப்பதுவே அதற்குக் காரணம்.

சுதந்திர தபால் முத்திரை

டில்லி, டிச. 14

இந்திய சுதந்திர தின ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் ஒன்றரை அணா உள்நாட்டு தபால் முத்திரையும் 12 அணா விமானத்தபால் முத்திரையும் டிசம்பர் 15-ம் தேதி முதல் வரும்.

கடைசி கௌரவப் பட்டினாதிபதி

1947 ஆகஸ்டு 14-ம் தேதி இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் அளிக்கப்பட்ட கடைசி கௌரவப் பட்டங்களின் ஞாபிதா புதுவருட தினத்தில் வெளியிடப்படும்.

பம்பாய் படைநிறுத்தம்

பம்பாய், டிச. 14

ராணுவ அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு வருடமும் 3000 வாலிபர்கள் விதம் புதிய வாலிபர் படையொன்றை நிர்மாணித்திருக்கிறார்கள்.

இந்தூரில் பொறுப்பாட்சி

இந்தூர், டிச. 14

இந்தூர் மகாராஷ்டிர சாஹித்திய சபையின் ஷதோத்சவ கொண்டாட்டத்தில் இந்தூர் மகாராஜா பேசியபோது, சமஸ்தானத்தில் பொறுப்பாட்சியை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்தார்.

ஹைதராபாத் மக்கள் சுதந்திரப் போர்

பம்பாய், டிச. 14

ஹைதராபாத் சமஸ்தானத்தில் வரிகொடாஇயக்கம் ஆரம்பிப்பதென ஹைதராபாத் சமஸ்தான காங்கிரஸின் நிர்வாகக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. ஹைதராபாத் சமஸ்தானம் இந்திய யூனியனில் சேரும்வரையும், சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி ஏற்படும்வரை சமஸ்தான காங்கிரஸ் சமஸ்தான சர்க்காருடன் எவ்விதமான சமரசமும் செய்து கொள்ளக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. நாளையும் கமிட்டி கூடும்.

ஹைதராபாத் இளவரசர் திருமணநிகழ்ச்சி

லண்டன், டிச. 14

ஹைதராபாத் இளவரசர் முஸாம் ஜா இன்று தனி விமானத்தில் தனது நிச்சயிக்கப்பட்ட வருங்கால மனைவியுடன் லண்டனிலிருந்து ஹைதராபாத்துக்குப் பயணமானார்.

ஒரிசாவில் சர்தார் பட்டேல்

கட்டாக், டிச. 14

ஒரிசாவிலுள்ள 19 வகுப்பு நிலவகுப்பு சமஸ்தான மன்னர்கள் மகாநாட்டுக்கு இன்று இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி சர்தார் படேல் தலைமை வகித்தார். அரசாங்க மாளிகையில் இம்மகாநாடு நடைபெற்றது. திருப்திகரமான முடிவுகள் ஏற்பட்டன. அதாவது இந்த சமஸ்தானங்களை ஒரிசா மாகாண நிர்வாகத்தில் ஐக்கியமாவதுபற்றி இந்திய சர்க்காருடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும். மகாநாடு முடிந்ததும் இந்த சமஸ்தான மன்னர்களுடன் இந்திய சமஸ்தான இலாகா காரியதரிசி வி. பி. மேனன் கலந்து பேசினார். பிற்பகல் ஒரிசா மாகாணத்துள்ள ஏ. வகுப்பு சமஸ்தான மன்னர்கள் மகாநாட்டுக்கு சர்தார் படேல் தலைமைவகித்தார்.

ஷேக் அப்துல்லா பூஞ்ச் விஜயம்

ஜம்மு, டிச. 14

இன்று காஷ்மீர் நிர்வாகக் தலைவர் ஷேக் அப்துல்லா காஷ்மீர் இந்திய தருப்புகளின் தளபதி ஜெனரல் குலவந்த சிங்குடனும் டிவிஜன் முகமதுடனும் பூஞ்சுக்கு விஜயம் செய்தார். ஜனங்கள் அவரை குதூகலமுடன் வரவேற்றனர். கடைசி முறையிடக்கப்படும் வரை ஜனங்கள் பலமான எதிர்ப்பு செய்து கொண்டிருக்க வேண்டுமென்று ஷேக் அப்துல்லா தெரிவித்தார். பிறகு மூவருமாக ஜீபில் ஏறி, எதிரிகளால் தாக்கப்பட்ட பிரதேசங்களான பூஞ்ச், கோட்லி, மீர்பூர், நௌஷாரா, ஸ்ரீநகர் ஆகியவற்றை பார்வையிட்டார்கள். பிறகல் ஜம்முவுக்குத் திரும்பி வந்தனர்.

சென்ற மாதம் ஸ்ரீநகருக்கு பண்டித நேரு விஜயம் செய்திருந்தபோது அவர் வாக்களித்தபடி ஏராளமான உப்பு, சர்க்கரை, பெட்ரோல், மற்றும் உணவுப் பொருட்கள் இந்தியாவிலிருந்து பனிஹால் கணவாய் வழியாக ஜம்முவுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

காஷ்மீர் போர்

சென்ற மூன்று தினங்களில் இந்திய துருப்புகள் ஊரிபகுதியில் எதிரிகளைத் தாக்கியதில் 320 எதிரிகள் கொல்லப்பட்டனர். கைகலப்புச் சண்டைகளும் நடைபெற்றதில் எதிரிகளில் வஜிரி பட்டாணியர்களும் பஞ்சாப் முஸ்லிம்களும் இருந்தது கண்டிபிடிக்கப்பட்டது. இந்திய துருப்புகளுக்கு ஒரு சேதமேற்பட்டது.

ஜம்முவில் இந்தியா - காஷ்மீர் பேச்சுகள் நடைபெற்றன. காஷ்மீர் சர்க்கார் சார்பாக மகாராஜா சர். ஹரிசிங்கும் ஷேக் அப்துல்லாவும் இந்திய சர்க்கார் சார்பாக மந்திரி சர். என். கோபால சாமி ஐயங்காரும் சந்தித்துப் பேசினர்.

முஸ்லிம் லீக் கூட்டம்

கராச்சி, டிச. 14

அகில இந்திய முஸ்லிம் லீக் கவுன்ஸில் கூட்டம் இன்று பகல் 11 மணிக்கு நடைபெறுகிறது. 250 லீகர்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஜனாப் நூருல் அமீன் ஒரு மணி நேரம் ஆங்கிலத்தில் பேசியதை சர்தார் அப்துர் ரப்நிஷ்தர் உருதுவில் மொழிபெயர்த்துக் கூறினார். இரண்டரை மணி நேரம் ரகசியமாகக் கூட்டம் நடைபெற்றதும் நாளை பகல் 10 30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பண்டித நேருவை வரவேற்க பிரிட்டனின் ஆவல்

லண்டன், டிச. 14

இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவை வரவேற்க பிரிட்டனுக்கு மிகவும் ஆவல் கொண்டிருக்கிறது.

அவருக்கு வசதி ஏற்பட்டு பிரிட்டனுக்கு விஜயம் செய்வாரேயானால், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி சர் ஸ்டாஃபோர்ட் க்ரிப்ஸ் அவரை ஆதரவுடன் வரவேற்பார்.

ரயில் பிரயாணியிடம் களவு

ரூபா 2000 நஷ்டம்

மாத்தறை, டிச. 15

வெள்ளிக்கிழமை பிற்பகல் மாத்தறைக்குச் சென்றுகொண்டிருந்த ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு மாதின் கைப்பை களவாடப் பட்டுவிட்டது. அதில் மொத்தம் ரூபா 2000 பெறுமதியான நகையும் காசும் இருந்ததாகத் தெரிகிறது. ரயிலில் களவாடியவர் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்ததாகவும், பின்னர் தல்பேயிலவே ஸ்டேஷன் சமீபித்தும், அவர் மிதிப்பலகையிலிறங்கி வண்ணம் கதவைப் பூட்டிக்கொண்டதாகவும் தெரிகிறது. பின்புஸ்டேஷனில் இறங்கி ரயில் புறப்பட்ட உடனே கைப் பையைப் பறித்துக் கொண்டு அவர் பாய்ந்து போய் விட்டாராம்.

இதன் பின்னர் ரயில் நிறுத்தப்பட்டு ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. போலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

சங்கக் கடையில் களவு

ரூபா 2000 பெறுமதியான புடவை மறைந்தது

கொழும்பு டிச. 15

யாழ்ப்பாணம் சிவியா தெருக்கட்டுறவுப் பண்டகசாலையில் 2000 ரூபா பெறுமதியான புடவைகள்வாடப்பட்டுவிட்டதாகப் போலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கள்வர்கள் கூரையில் இருந்து ஓடுகளை கழற்றிவிட்டு அதன் மூலமாகவே உள்ளே புகுந்ததாக நம்பப்படுகிறது. போலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

கவலையீனமாகக் கார் ஓட்டியமை

எதிரிக்கு இரு வருடச் சிறைத்தண்டனை

கண்டி, டிச. 15

சௌரிராஜன் என்னும் சிறுவனை தனது கவலையீனமான சாரதியத்தினால் லொறியை மோதிச் சாகும்படி செய்த அப்துல் ரஹ்மான் என்ற கமபளை வாசி இப்போது இருவருட சிறை விதிக்கப்பட்டிருக்கிறார்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்

மாத்தறையில் அடுத்த மகாநாடு

மாத்தறை, டிச. 15

இங்கு ராகுல கல்லூரியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அடுத்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் கூட்டத்தை மாத்தறையிலேயே நடத்தவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

ஜப்நாடுகளைப் பாதிக்கக்கூடிய சர்வதேச நிலைமைகளைப்பற்றி அவருடன் கலந்து பேச பிரிட்டிஷ்சர்க்கார் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் பண்டித நேரு இந்தியாவின் அந்நியநாட்டு மந்திரியாகவும் இருப்பதால் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி பெவின் அவருடன் சம்பாஷிக்க ஆவலாக இருக்கிறார்.

இந்தியா, பாகிஸ்தானிலுள்ள அகதிகள் கஷ்ட நிவாரணத்துக்காக பிரிட்டிஷ் செஞ்சிலுவை சங்கத்தின் முயற்சிகளுக்கு உதவும்படி பிரிட்டிஷ் மந்திரிகளின் மனைவிமார்களுடைய 100 பிரிட்டிஷ் பிரபல மாதர்கள் பிரிட்டிஷ் மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். அவ்வேண்டுகோளில் பொக்கிஷ மந்திரி கிரிஸ் சாம்ராஜ்ய உறவு மந்திரி நோவல் பேக்கர், லார்டு ஹாலிபாக்ஸ், லார்டு பெதிக்லாரன்ஸ், லார்டு லேய்டன் ஆகியோரின் மனைவிமார்களும், மிஸ்டர் ஆட்லி இவரின் தொண்டன், பிரபல நடிகை புளோரா ராப்சன், நாவலாசிரியை ஸ்டாம் ஜேம்சன், லேடி வாலஸ் ஹாம் ஸ்டீட், லேடி ரீடிங், மாஜிஸ்திரேட் மிஸ் பில் கேம்பெல் முதலியோர் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். [ராய்ட்டர்]

இந்திய விமானப் படை

தமிழ் நாட்டில் இரு இடங்களை தனிப பயிற்சிக் கல்லூரிகள்

புதுடில்லி, டிச 15

சென்னைக்கருகே ஆர்க்கோணத்தில் இந்திய விமானப் படை தனிப்பயிற்சிக் கல்லூரியொன்று விமானப் படைத் தலைவர் ராவல் சிங் தலைமையில் நிறுவப்பட்டிருக்கிறது. இது இந்தியாவில் நிறுவப்பட்டிருப்பதிலிருக்கும் கல்லூரிகளில் மூன்றாவதாகும். கேப்டன் கோயல் தலைமையில் சென்னைக்கருகேயுள்ள தாம்பரத்தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டிருக்கிறது. ஜலஹல்லியில் கமாண்டர் சூர் சேதராம் தலைமையில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டுள்ளது

மான் இறைச்சி கொண்டுவந்தவர்களுக்கு ரூ. 40 அபராதம்

சாவகச்சேரி, டிச. 13

மாவளம் பொன்னுத்துரை முத்துக்குமாரசுவாமி என்பவரும் இன்னும் மூவரும் ஆடி மாதம் 19-ந் தேதி 70 ருக்கான் இறைச்சியை உத்தரவின்றிக் கொண்டுவந்தார்கள் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு சாவகச்சேரி நீதிபதி எதிரிகளுக்கு தலா ரூபாய் 40 அபராதம் விதித்தார். [ந-நி]

கை விலங்குடன் காட்டில் ஓடிய கைதி பிடிபட்டார்

சாவகச்சேரி, டிச. 12

சாவகச்சேரி பிள்ளால் காவலிலிருந்து தப்பியோடிய கைதி குமரேசு என்பவர் இதுவரையும் தலைமறைவாகத் திரிந்து பிள்ளால பகுதியாரதும் போலீஸ் பகுதியாரதும் விடா முயற்சியாலும் பிரயாசையாலும் இன்று குறித்த கைதியை சாவகச்சேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு முருகேசு என்பவர் பிடித்து சாவகச்சேரி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில ஆஜர்படுத்தியபொழுது கைதி ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார் [ந-நி]

போலீஸை எதிர்த்தவருக்கு ஆறுமாதக் கடுழியம்

சாவகச்சேரி, டிச 13

சாவகச்சேரி வடக்கு செல்லையா கனகசபை அல்லது குஞ்சராசா என்பவரை விரும்பி பிடிப்பதற்காகச் சென்ற புரட்டாதி மாதம் 21-ம் தேதி பேசாலை பகுதியைச் சேர்ந்த ரகதனுயக்கா என்பவர் சென்றபொழுது அவரைத் தடைப்படுத்தினார் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு சாவகச்சேரி போலீஸ் நீதிபதி ஒரு மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார். (ந-நி)

ஆராதனையைத் தடை செய்தவருக்கு ஒரு வருட சிறை

சாவகச்சேரி டிச 12

கார்த்திகை மாசம் 16-தேதி மிருசுவில் குசைப்பிள்ளை அரசரடனம் எனபவர் மிருசுவிலிலுள்ள ரோமன் கதோலிக்க ஆலயத்துட் குடிவெறியோடு சென்று கோவில் குருவானவரை தகாதமுறையிலே பேசி அவருடைய ஆராதனையைத் தடைபடுத்தினார் என்றுதொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எதிரிக்கு ஒரு வருடக் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ந-நி)

சத்திர சிகிச்சையின் போது மரணம்

கொழும்பு, டிச. 15

கிரிண்டிவெலவைச் சேர்ந்த பொடிமெனிக்கா என்னும் மாது ஒரு ஆப்ரேஷன் செய்யப்படும்போது, அம் மேசையிலேயே இறந்துபோய்விட்டாள் என்று தெரிகிறது.

பட்டப்பகலில் கொள்ளை

1613 ரூபா போயிற்று

வாதுவை, டிச. 15

பொத்துப்பிட்டியாவில் உள்ள பௌத்த கலவன் பாடசாலைத் தலைமை ஆசிரியரால் கந்தோரில் அருந்த ஆசிரியர்களின் சம்பளமாக ரூபா 1613-21 பெற்றுத் திரும்பிக் கொண்டிருக்கும் வழியில் இருவரால் வழிமறிக்கப்பட்டார். அவர்களில் ஒருவர் அவர் கையில் இருந்த பணப் பெட்டியைப் பறித்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக ஆர். ரோபேர்ட் சில்வா என்பவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

மூன்று கொலைகள்

கொழும்பு, டிச. 15

மூன்று கொலைச் சம்பவங்கள்பற்றி இன்று கொழும்பு போலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவற்றில் ஒன்று கொட்டுவக்கடையில் நடைபெற்றுள்ளது. காலம் சென்றவர் பெயரி எம் ஹனீபா எனபதாகும். இச் சம்பவம் காரணமாக அப்துல் அஸீஸ் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். காலஞ்சென்றவர் உடம்பில் கிரிஸ் கத்தியின் காயம் காணப்பட்டது.

ஒபாதெல்லையில் இருந்து ஓர் கொலைச் செய்தி வருகிறது. இக்கு ஜே எம் அதோசிவகோ என்பவர் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார். எதிரியார் என்பது தெரியவில்லை

வெலிகம போலீஸ் பகுதியில் உள்ள பகதேகமயில் 65 வயதுக்கிழவரான ஜே அப்புஹாமி என்பவர் கொலையுண்டது சம்பந்தமாக டொன் ஹென்ட்ரிக், பிரேமரதனே என்ற இருவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர் ஒரு வாளால் வெட்டப்பட்டிருப்பதோடு ஓர் உலக்கையாலும் அடிக்கப்பட்டுள்ளார்.

பெண்ணை அடித்துப் பயமுறுத்தியவருக்கு 1 மாசக்கடுழியம்

சாவகச்சேரி, டிச. 12

கைதடி வாசியாகிய சுப்பையல்லி என்பவன் அவ்வூர் முருகன் பெண்வைரவிக்கு ஒரு கரணமுமிறி அடித்துப் படுகாயப்படுத்தினான் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எதிரிக்கு ஒரு வருடக் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ந-நி)

சிங்கள நாட்டுப் பாடல்கள்

இசைத் தட்டுகளில் பதிவு

மாத்தறை, டிச. 15

சிங்கள நாட்டுப் பாடல் ராகுல கல்லூரியில் வைத்த கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவு செய்யப்பட்டன. பல பள்ளி மாணவர்கள் இதில் பங்குபற்றினார்கள்

பண்டிகைத் தபால்கள்

தபால் அதிகாரி வேண்டுகோள்

கொழும்பு, டிச. 15

இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் ஆகாய தபால்கள் இம் மாதம் 17-ம் தேதிக்கு முன் அனுப்பினால் தான் கிறிஸ்மஸ் பண்டிகைக்குக் கிடைக்கும் எனத் தெரிகிறது. பிரதம தபால் அதிகாரி பண்டிகை தபால்களைச் சீக்கிரமே கட்டிவிசர்க்குமபடியாகக் கூறி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

எலெக்ட்ரிக் பைசிக்கிள்

லண்டன், டிச. 15

பெட்ரோல் பஞ்சத்தால் மோட்டார்காரை உபயோகிக்க முடியாது தத்களித்த ரீடிங் நகரச் சேர்ந்த 75 வயதுள்ள ஓர் முனிசிபல் உத்தியோகஸ்தர் மின்சார விசையில் ஓடும் ஓர் பைசிக்கிளைக் கண்டு பிடித்திருக்கிறார் சாதாரண பைசிகளில் 12 வோல்ட் பேட்டரியுள்ள எஞ்சினை மாட்டி ஓட்டுகிறார் இது மணிக்கு 20 மைல் வேகத்தில் ஓடுகிறது.

முகமூடிக் கள்வன் பிடிபட்டான்

கையில் சுழல் துப்பாக்கி இருந்தது

கண்டி, டிச. 15

அம்பிட்டியாவில் உள்ள ஒரு வாகதர் கொழும்புக்கு ஒரு லாரியில் செல்லுகையில் அவரை வழிமறித்துக் கொள்ளையிடும் நோக்கமாக விக்டோரியாட்டரைவுக்குச் சமீபம் ஒரு கள்வர் கோஷ்டி பதுங்கி இருந்தது. போலிஸார் இதுபற்றிய தகவல் எட்டியதன் காரணமாக திடுப்பிரவேசமாகப் புகுந்து அவர்கள் எண்ணத்தைப் பாழாக்கி விட்டனர்

போலிஸாரைக் கண்டதும் கள்வர் கோஷ்டியினர் மெல்ல நழுவிவிட்டதாகத் தெரிகிறது. ஒரே ஒரு முகமூடிக் கள்வன் மட்டும் பிடிக்கப்பட்டான். இவனே கோஷ்டியின் தலைவன் என்று எண்ணப்படுகிறது. அவன் தன்னிடம் இருந்த சுழல் துப்பாக்கியைக் காட்டித் தப்பித்துவிட முயன்றான். ஆனால் அது பலிக்க இடமில்லாது போயிற்று.

கைது செய்யப்பட்ட முகமூடிக் கள்வனின் பெயர் பேர்டினன்ட்ஸ் அல்லது ஜேம்ஸ் என்று தெரிகிறது. அவன் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறான்

புத்தளத்தின் புதிய பிரதிநிதிகள்

நகரசபைத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள்

புத்தளம், டிச. 15

புத்தளம் நகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்:
ஏ. எம். எம். ஏ காதர்

2-ம் வட்டாரம்:
டாக்டர் டபிள்யூ. ரி. ஓல்முஸ்

4-ம் வட்டாரம்:
எஸ். எம். எம். காசிம்

5-ம் வட்டாரம்:
ஏ. ஸி எம். முகம்மது நயினா மரைக்கார்

7-ம் வட்டாரம்:
ஏ. எம் எம். மொஹிதீன்

8-ம் வட்டாரம்:
எம். ஸி எம். தம்பி நயினா மரைக்கார்.

ஆசிரியருக்குக் கடிதம்

வாயடக்கமாய் இருப்பாராக?

ஐயா!

29-11-47-ல் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, மட்டக்களப்பு மக்கள் தமிழ் காங்கிரசை ஆதரிக்கவில்லையென்றும், மட்டக்களப்பு தமிழர் சிங்களவருக்கு அடிமைகளாய் இருந்தனரென்றும், சரித்திரமறியாது வாய்கூசாது, மானமின்றிக் கூறிய காரியப்பரின் கண்மூடித்தனத்திற்காகப் பெரிதும் இரங்குகின்றேன்.

யூ. என். பி வெண்ணெயில் வீழ்ந்திருக்கும் காரியப்பர் மட்டக்களப்பு மக்களுக்காகப் பேசுவதை மட்டக்களப்பிலுள்ள நாங்கள் வெறுக்கிறோம் கல்முனையிலும் ஒரு சில வாக்குகளைக் கடுசலாய் பெற்றுப் பாராளுமன்றத்துட் சென்ற காரியப்பர் இன்று யூ. என். பிக்காக மட்டக்களப்பு மக்களைப் பணயம்வைத்துச் குதாடி மட்டக்களப்பினரின் மானத்தைப் போக்குவது சீச்சீ! சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை.

தயவுசெய்து காரியப்பர், இலங்கைச் சரித்திரத்தை ஒரு முறை படித்துப்பார்ப்பாராக! தெரியாத விஷயங்களைப்பற்றிப் பாராளுமன்றத்தில் பேசி, யூ என். பிக்காகப் பந்தம்பிடிக்காமல் 'வாயடக்கமாய்" இருப்பாராக.

அடுத்த தேர்தலில் மட்டக்களப்பு மக்கள் தமிழ் காங்கிரசை ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கும்படி காரியப்பரை கேட்கிறேன்.

இங்ஙனம்,
அ. கனகசபை

காரைதீவு, 9-12 47.

பிரிட்டிஷ் நிலக்கரி ஏற்றுமதி விலை ஏற்றம்

லண்டன், டிச. 14

டிசம்பர் முதல்தேதி முதல் ஏற்றுமதியாகும் பிரிட்டனின் நிலக்கரி விலை டன்னுக்கு 25 ஷில்லிங் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (ராய்ட்டர்)

சிலோன் சீட்டுக்கம்பெனி லிமிடெட்.,

இலங்கையில் சட்டப்படி இணைக்கப்பட்டது.

188, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு. 11

சேமிப்பு! சேமிப்பு!!

கவர்மென்டு செக்யூரிட்டியோடு நடக்கும் ஏலச் சீட்டு பணத்துக்கு பூரண உத்திரவாதம் உள்ளது.

நம் கம்பெனி சந்தாதாரர்களுக்கு அவர் அவர்களின் சந்தா பெறுமதிக்குத் தகுந்த முறையில் அவசர தேவைகளுக்கு பணம் கொடுத்து வாங்கப்படும்.

விபரங்கள் தபால் மூலமோ நேரிலோ பெறலாம்.

அரு. மெ. மெய்யப்ப செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்

= NEW ARRIVALS =

SANITARYWARE

Porcelain Enamelled Cast Iron Baths —Complete—
Low & High Level Suites —do—
E. W. Pipes & Fitting —do—
European Seats —do—
Basins—Ordinary & Pedestal —do—
Bidets—Complete—

CEMENT — Best English—Portland; London Brand—94 lbs; Red Hand Brand—112 lbs. — In 6 ply Paper Bags

SHEETS — Galvanized Iron; Zinc; Black Iron; Aluminium — In various Sizes

SCREWS — Nettlefolds—Iron Wood; —Brass Wood — All Sizes

TANKS — Galvd. Storage—200 & 400 gals. Capacity—Imported. Also we can make & supply—50, 75, 100, 150, gals. Capacity.

WIRE — MESH GALVD.—Nos. 30; 24; 6; Etc. NAILS —All sizes

ETC. ETC. ETC.

At Competitive Prices — Enquiries Solicited.

EASTERN HARDWARE STORES LTD.,
425, OLD MOOR STREET—P. O. No. 7—COLOMBO.
'Phone—5307 & 5308 — 'Grams.—'Easthard'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

'சுதந்திரம்' என்ற வார்த்தையைக் கேட்டு துடை நடுங்கிய கோழைகள்

தேச பக்தர்களுக்கு விரோதமாக பொய் பிரசாரம் செய்யும் ஆஷாடபூதிகள்

இலங்கையின் சுதந்திரத்திற்குப் போராடியவர்கள் இடதுசாரிகள்!

சென்ற வாரம் வெளிவந்த ஜனசக்திய என்னும் சிங்களப் பத்திரிகை எழுதியிருக்கும் ஆசிரியத்தலையங்கம் பின்வருமாறு:-

இலங்கைக்கு சுதந்திரம்கிடைத்தது சம்பந்தமாக பிரதம மந்திரியார் பார்லிமெண்டில் ஒரு "பாராட்டுத் தீர்மானம்" கொண்டுவந்தார் அதை எதிர்த்து பதினொரு (கமியூனிஸ்ட், லெனினிஸ்ட்,) பார்லிமெண்டுப் பிரதிநிதிகள் வாக்களித்தார்கள். இவர்களை தேசத்துரோகிகளென்று திரு. சேனநாயக்காவும் யூ. என். பி பத்திரிகைகளும் பொது மக்களுக்கு காட்டிக் கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றன.

இவ்வித பொய் பிரசாரங்களினால் திரு. சேனநாயக்காவுக்கோ யூ. என். பி. யினருக்கோ பொது மக்களின் எவ்வித உதவியையும் பெற்றுக் கொள்ள முடியாது. பொது மக்களின் சுகலாபங்களை முன்னிட்டும் பாடுபட்டவர்களும் தேசத்தின் பூர்ண சுதந்திரத்திற்காக போராடியவர்களும் எவரென்று, தேச மக்கள் நன்கறிவார்கள் "பூர்ண சுதந்திரம்" என்ற சொல்லைக்கூட அரசாங்க சபையில் உபயோகித்தவர், பழைய அரசாங்க சபையில் மொறவக்க பிரதிநிதியாய் இருந்த இடதுசாரியான டாக்டர் விக்கிரம சிங்காவே என்பதையாரும் மறந்தபோய் இருக்க மாட்டார்கள்.

முதலாவதாக சாம்ராஜ்ய எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தவர்களும், தேசிய சுதந்திரப் சம்பந்தமான போராட்டத்தை ஆரம்பித்தவர்களும் சமசமாஜக் கட்சியினரே யென்பதையும், அந்தப் போராட்டம் 1935-ம் வருடத்திலிருந்து இன்றுவரைக்கும், வருங்காலத்திலும் நடக்குமென்பதையும் பொது மக்கள் நன்கறிந்திருக்கிறார்கள்.

சிறிது காலத்துக்குமுன் யூ. என். பி யினர் சோல்பரி திட்டத்தை "சுதந்திர திட்டம்" என்று ஒப்புக்கொண்டதோடு தேசமக்களிடையே பிரசாரமும் செய்தனர். ஆனால் கமியூனிஸ்ட் கட்சியும் மற்றும் இடதுசாரிகளும் சோல்பரித் திட்டத்தினால் சுதந்திரம் கிடைக்கமாட்டாதென்றதோடு அதைஎதிர்த்ததும் பிரசாரம் செய்தார்களென்பதை பொதுமக்கள் நன்கறிவார்கள்.

சோல்பரி அரசியல் திட்டத்தை அரசாங்க சபை ஒப்புக்கொண்ட சமயத்தில், இந்த அடிமைத் திட்டத்தை எதிர்க்குமுகமாக பொதுவேலை நிறுத்தங்களுடன் பொது ஜனக் கிளர்ச்சியும் தேசமெங்கும் நடந்தன. இதற்கெல்லாம் இடதுசாரிகள் முன்னின்று உழைத்ததின் பிரதிபலனாக சிறைவாசமும் செய்தார்கள். எனவே பொதுமக்களின் ஜீவாதார உரிமையைக் காப்பாற்றப் போராடியவர்கள் முற்போக்கு வாதிகளான இடதுசாரிகளே என்பதை தேசமக்கள் நன்கறிவார்கள்

மற்றப்படி யூ. என். பி. கட்சியும் அதன் தலைவர்களும் தேச சுதந்திரத்திற்காக என்னதான் செய்துவிட்டார்கள்? அவர்கள் அடுத்தடுத்து அரசாங்க சபை மூலமாகவும் சொந்த ஹோதாவிலும் வெள்ளை மாளிகைக்கு சென்று தண்ட நமஸ்காரம் செய்து பல்லிளித்தார்கள், அவசரத் தந்திகளையும் கடிதங்களையும் அனுப்பி தமக்கு அநுகூலமானபடி சட்டங்களை சீர் திருத்தம் செய்திருக்கிறார்கள். இவைதான், தேசிய விடுதலைக்காக இவர்கள் செய்திருக்கும் போராட்டமாகும்.

இந்த யூ. என். பி. காரர்கள் எமக்கு எதிராக எந்தவிதமான பொய்க் குற்றச்சாட்டையும் சொல்லட்டும். இதற்காக நாம் அவர்களோடு வைராக்கியம் கொள்ளவில்லை. ஆனால், இவர்கள், இன்றைக்கு இடதுசாரிகள் தேசிய சுதந்திரத்திற்காக முட்டுக்கட்டையாய் இருக்கிறார்களென்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறபடியால் இவர்களுக்கு முற்றாக மறந்துபோய் இருப்பவைகளைப்பற்றி கீழே ஆடவேண்டியிருக்கிறது.

1931 ல், இன்றைக்கு யூ. என். பி. யில் இருக்கிற சிலர் சர்வஜன வாக்குரிமைக்கு எதிராக இருந்தார்கள். இலங்கை தேசிய காங்கிரஸில் "டொமினியன் அந்தஸ்து" க்குப் பதிலாக "பூரண சுதந்திரம்" வேண்டிய பொழுது திரு. சேனநாயக்காவுக்கு வந்த கோபத்திற்கே அளவில்லை பூரண சுதந்திர கோரிக்கைக்கு அநுகூலமாக இலங்கை தேசிய காங்கிரஸில் இடதுசாரிகளும் இருந்தது திரு. சேனநாயக்காவுக்குப் பொறுக்கவில்லை எனவே, அவர் அதிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டார்.

சமீபனியில் நடந்த இலங்கை தேசிய காங்கிரஸ் மகாநாட்டில் "தேசிய சுதந்திரக் கோரிக்கைக்கு எதிராக வாக்குக் கொடுத்த நால்வருள் திரு சேனநாயக்காவும் ஒருவர் என்பதை அவர் மறப்பாரா?

திரு டி எஸ் சேனநாயக்காவும் அவரது ஆலோசனைக்காரர்களும் அந்நியநாட்டு மந்திரியுடன் சம்பாஷனை நடத்திய பொழுது, இடதுசாரிகள் பூரண சுதந்திரத்திற்காக நடவடிக்கை யெடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்றும், எப்படியாவது அவர்கள் ஆதிக்கத்திற்கு வருவார்களென்பதையும் அவர் நிச்சயமாக அறிந்து கொண்டிருக்கிறார். எனவே தான் பொது மக்களை இடதுசாரிகளுக்கெதிராக ஏவி விடுவதற்கு திரு. சேனநாயக்கா ஏதோவெல்லாம் சொல்லுகிறார்.

அரசாங்கக் கட்சியினர் பெற்றுவிட்டதாகச் சொல்லப்படும் "சுதந்திரம்" அவர்களின் சுதந்திர மசோதாவில் இல்லையென்பது அரசியல் அறிவுள்ளவர்களுக்கு நன்கு தெரியும். ஆனபடியால்தான் அதில் "பாராட்டக்கூடிய எதுவும்" இல்லையென்று தீர்மானித்து, அந்த பாராட்டு தீர்மானத்திற்கு எதிராக வாக்குக்கொடுக்க கமியூனிஸ்ட், லெனினிஸ்ட் கட்சியினர் முன்வந்தனர். இச் செய்கை தேசத் துரோகமாவதெப்படி?

இலவசக் கல்வி முறை

கவர்னர் உபதேசம்

ராயல் கல்லூரியின் சிறப்பு

கொழும்பு, டிச 14

ராயல் கல்லூரி பரிசளிப்பு விழாவில் நேற்று கவர்னர் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- இக்கல்லூரி வேலையிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குகிறது. இந்தத் தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே அந்நியோன்யமான பழக்கத்தையும் பரந்த மனப்பான்மையையும் அடைய வேண்டுமென்றும் இத்தன்மைகள் பிற்காலத்தில் பொதுவாழ்வில் அவர்களுக்கு மிக்க பலனளிக்குமென்றும் சென்ற வருடம் நான் இங்கு பேசியபோது தெரிவித்திருக்கிறேன்.

இப்பொழுது இலங்கை தன்னைத்தானே நிர்வகித்துக்கொள்ளும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போவதால் புதிய லங்கைவை ஆளும் திறமையுள்ள பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பு கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அதிக அளவில் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் இந்த ராயல் கல்லூரிக்கு அப்பொறுப்பு மிகவும் அதிகமாகும். ராயல் கல்லூரியின் பழைய மாணவர்கள் பொது வாழ்வில் சிறந்து விளங்குவதை நீங்கள் காண்கிறீர்கள். இக்கல்லூரியைச் சேர்ந்த பழைய மாணவர்கள் 'சர்' பட்டதாரிகளாகவும் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளாகவும் இருக்கிறார்கள் கொழும்பு மேயரும் ஐந்து மந்திரிகளும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள்! இன்னும் இரு பாராளுமன்ற காரியதரிசிகளும் இரு நிரந்தர காரியதரிசிகளும் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் சிலரும், சாவகலாசாலையையும் பல அரசாங்க இலாகாக்களையும் சேர்ந்த பல அரசாங்க அதிகாரிகளும் இக் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருப்பது கண்டு மகவும் பெருமைப்படவேண்டியதே! இவ்விதம் திறமைவாய்ந்த இக்கல்லூரி தனது பெருமையை மென்மேலும் உயர்த்திக்கொண்டே போகவேண்டும் இக்கல்லூரியின் பழைய மாணவரே இப்பொழுது கல்வி மந்திரியாக இருக்கிறார். அவருக்கு வேறு அலுவலிருப்பதால் அவர் இங்கு வந்து அரசாங்கத்தின் கல்வி கொள்கையைப் பற்றி உங்களுக்கு கேரில் சொல்ல சந்தர்ப்பமில்லாது போய் விட்டது.

இலவசக் கல்வி முறையை நமது பல்வகைமான கலவி ஸ்தாபனங்களில் நடைமுறையில் அனுஷ்டிப்பதில் சிக்கலான பல பிரச்னைகள் ஏற்படுவதை நாம் காண்கிறோம் இம்முறையை கல்வி மந்திரி திரு நுகவெல நிறைவேற்றி வைப்பார் என்று நீங்கள் அனைவரும் நம்புவீர்கள் என்று கருதுகிறேன் மதசம்பந்தமான கல்வி போதிக்கப்படுவதில்பிறமதத்தைச்சேர்ந்தமாணவர்களுடன் பிளவு ஏற்படாத வகையில் போதிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் பள்ளிக்கூடங்களில் பல மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்குள் அந்நியோன்யமேற்படுவதுடன் நாடடன் பொது வாழ்வுக்கும் அரசியல் வாழ்வுக்கும் அது பயன்படும். ஆகவே பல மதத்தினரிடையே ஒற்றுமையை வளர்க்கக் கூடிய முறையிலேயே மதக் கல்வி போதிக்கப்படவேண்டும்.

ராஜன் பாபு பர்மா செல்வார்

சுதந்திர விழாவில் கலந்துகொள்ள

அலகாபாத், டிச. 14

அடுத்த வருஷம் ஜனுவரி மாதம் 4-ந் தேதி நடக்கப்போகும் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் பர்மாசெல்வார் என்று யுனைடெட் பிரஸிருபர் அறிவிக்கிறார் சென்ற வாரம் இந்தியா வந்திருந்த பர்மா பிரதமர் இவரைத் தங்கள் தேச சுதந்திர விழாவுக்கு வரமாறு அழைத்தாராம். ராஷ்டிரபதி பிரசாத் பர்மா விழாவுக்கு செல்ல வேண்டுமென்று உயரிய தலைவர்கள்கூடக் கருதுகின்றனராம்.

இவருக்குப் பதிலாக வேறு பாராவது உணவு மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாரா என்று கேட்டபோது இன்னும் யாரும் தெரிந்தெடுக்கப் படவில்லையென்றார். இன்னொருவர் நியமிக்கப்படும் வரையில் இப்பதவியை நான் வகித்து வருவேன் என்றும் டாக்டர் பிரசாத் சொன்னார்.

140 வருஷமாக இருந்த பிரிட்டிஷ் பட்டாளம்

இந்தியாவிலிருந்து வெளியேறுகிறது

கராச்சி, டிச. 14

இந்தியாவுடன் 140 வருஷ காலமாக தொடர்பு கொண்ட ஒரு பிரிட்டிஷ் பட்டாளம் ஒன்று கராச்சியிலிருந்து பிரிட்டனுக்குப் புறப்படும். இந்தப் பட்டாளம் 1807-ம் வருஷம் இந்தியாவுக்கு வந்தது.

கப்பலேறுமுன் இப்பட்டாளத்தினர் பாகிஸ்தான் தலைநகரில் அணிவகுத்துச் செல்வர்.

வெள்ளித்திரையில் காஷ்மீர் ஆக்ரமிப்பு

டிச. 19 உ இந்தியா முழுவதும் வெளியாகும்

பம்பாய், டிச. 14

"காஷ்மீர் கதையின் முதல் பகுதி பம்பாய்பத்திரிகையாளர்களுக்கு இன்று காட்டப்பட்டது காஷ்மீர் மீது மலைஜாதியார் நடத்திய ஆக்கிரமிப்பு பற்றிய ராக்கிமெண்டரி சினிமாப் படமே இது. ஸ்ரீ டி. எப். காகாவின் விளக்க உரையுடன் படம் பிடிக்கப் பட்டிருக்கிறது.

இப்படத்திற்கு இந்திய சர்க்கார் மந்திரிகள் அங்கீகாரம் அளித்து விட்டனர். டிச. 19-ந் தேதி இந்தியா முழுவதும் இப்படம் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

உலகப்பிரசித்தி பெற்ற

டி.எஸ். கம்பெனி களிமார்க் பீடிகளை

உபயோகியுங்கள்

D. S. SONS. MUKKUDAL.

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வ. கந்தையா, C. G. R. கம்பனி சொல்வதாவது:

சிர ரோகத்தின் கஷ்டத்தால் கண்ணினும் உபாதை ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் பெறாது, கடைசித்தடவையாக M. K. ஜெகநாதன் கண்வைத்தியரிடமிருந்து, சிர நேத்திராஞ்சன தைலத்தை எடுப்பித்து பாவித்தமட்டில் எனது தலையிடி முதலிய வருத்தங்கள் நீங்கியதுடன் கண்ணுக்கும் பூரணசுகத்தைப்பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வகுணத்தின் பெருமைக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் எனது பேப்பர் மூலமாக இதை யாவர்க்கும் பிரசித்தம் படுத்துகிறேன்.

ஒப்பம்

வ. கந்தையா C. G. R. கம்பனி.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், சுபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, சரம்புக் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.



விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாக எழுதவும்.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

இலங்கையில் சாராய உற்பத்தி

பளுவான இறக்குமதி வரியால் பெருக்கெடுக்கும்

கொழும்பு, டிச. 14

இறக்குமதியாகும் மது பான வகைகள் மீது அரசாங்கம் பளுவான வரி விதித்திருப்பதால் அந்நியக் குடிவகைகளின் விலை வாசிகள் விஷப்போல எறிவிட்டபடியால், இலங்கையின் சாராய உற்பத்தியைப் பெருக்க சாராய உற்பத்தித் தொழிற்சாலையினர் கச்சைகட்டி வேலை செய்ய ஆரம்பித்துவிட்டனர். சாராய ரகத்தை உயர்த்தவும் முயற்சியெடுத்து வருகிறார்கள் இறக்குமதி வரி விதிக்கப்படும் என்ற விஷயத்தை முன்னமேயே யூகித்தறிந்திருந்தபடியாலோ என்னமோ. நவம்பர்மாதம் சாராய உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளன.

சராசரி மாதம் 45000 கலன் விற்பனையாகும் சாராயம் நவம்பர் மாதத்தில் 26000 கலன் அதிகமாக விற்பனையாகி இருக்கிறது. டிசம்பரில் கிறிஸ்மஸும் வருவதால் உள் நாட்டுச் சாராய விற்பனைக்கு சுக்கிர திசை தான்! நாற்றத்தைக் குறைத்து ருசியை அதிகரிக்க கலால் இலாகாகாரர் சாராயப் பரிசோதனை நடத்திவருகிறார்கள். இதுவரை சித்தி ஏற்படவில்லை யென்றபோதிலும் கூடியசீக்கிரம் வெற்றி கிடைக்குமென்று கருதுகிறார்கள். இறக்குமதி வரி விதிப்பால் உள்நாட்டுச் சாராய விற்பனை அதிகரிக்கும் என்ற உத்தேசத்தின் மீது தயாரிக்கப்பட்ட கணக்கின்படி இவ் வருடப் லேவிசம் கலன் சாராயம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. விளைகிழமப்பவர்கள் விஸ்கியின் மிதமிஞ்சிய விலையுயர்வின் காரணமாக, யுத்த காலத்தில் செய்தது போல இப்பொழுது போத்தல் 8 ரூபாய் விலைக்கு விற்கும் முதல்தர இலங்கை சாராயத்தைக் குடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இலங்கை சாராய உற்பத்தியாளருக்கு கலனுக்கு 75 சதம் லாபம் கிடைக்கும். அரசாங்கத்திற்கு வருடத்திற்கு 240 லட்சம் ரூபாய் லாபங்கிடைக்கும்.

ஆஸ்திரேலியாவில் குடியேறச்செல்லும் 800 வெள்ளையர்கள்

கொழும்பு, டிச. 14

ஆஸ்திரேலிய சர்க்காரின் வெள்ளையர் குடியேற்றக் கொள்கையின்படி பால்கன் நாடுகளிலிருந்து (கிரீஸ், ருமேனியா, யூகோஸ்லவியா, பல்கேரியா, இத்தாலி, மால்டா) யூதர்கள் உட்பட 800 வெள்ளையர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேற எகிப்து கப்பல் "மிஸ்ரா" வில் நேற்று மூன்றினம் கொழும்பு மார்க்கமாகச் சென்றார்கள்.

கூட்டுறவு சங்கத்துக்கு வெங்காய இறக்குமதி

கொழும்பு, டிச 14

தென்னிந்தியாவிலிருந்த 'பாரலா' கப்பலில் 8800 மூட்டை வெங்காயம் இறக்குமதியாகியிருக்கிறது. இது கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் விநியோகிக்கப்படும். பம்பாய் வெங்காயம் இரு கப்பல்களில் வருகின்றன. எகிப்திலிருந்து வரும் உணவுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு விட்டதால் இனி வியாபாரிகள் எகிப்திலிருந்து வெங்காயம் தருவிக்கலாம்.

வழக்கறிஞர் பஸநாயக நிலாமேயானார்

மாத்தறை. டிச. 14

மாத்தறை கிரௌன் புரொக்டரான திரு இ. பி. விஜயதுங்க, டொண்டராவிலுள்ள ஸ்ரீ விஷ்ணு மஹா தேவாலயத்தின் பஸநாயக நிலாமேயாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கம்

கொழும்பு, டிச. 13

மேற்படி சங்கத்தின் மாதாந்திரப் பொதுக் கூட்டம் 10-12-47-ல் கொள்ளுப்பிட்டி தர்மகீர்த்தி ரோட்டில், சங்கத் தலைவர் திரு எஸ். எஸ் பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"இலங்கையில் இந்தியா பிரதிநிதியாயிருந்த திரு வி. வி கிரி அவர்களை 'ஹைகமிஷனர்' அந்தஸ்துக்கு பதவி உயர்த்தப்பட்டிருப்பதைக் கண்டு இப்பொதுக் கூட்டம் மகிழ்ச்சியடைவதுடன், இம் மகிழ்ச்சியை திரு கிரி அவர்களுக்கும் தெரிவிப்பதுக் கொள்கிறது."

கொள்ளுப்பிட்டி வாசி தற்கொலை

கொழும்பு, டிச. 14

கொள்ளுப்பிட்டி ரிப்பன் ரோடு 2-ம் நம்பர் வீட்டில் வசித்துவந்த 69 வயதுள்ள திரு ஆர். ஏ. நிசநாயகாவின் பிரேதம் சனிக்கிழமை காலை கடற்கரையில் ஒதுக்கப்பட்டிருந்தது. பிரேத விசாரணையில் அவர் மன நம்மதியின்றி கடலில் விழுந்து தற்கொலை செய்துகொண்டதாக முடிவு செய்யப்பட்டது.

பௌத்த இளைஞர் சங்க மண்டபம்

பிரதம மந்திரி அஸ்திவாரக் கல் நாட்டினார்

கொழும்பு, டிச. 15

பொரளையிலுள்ள பௌத்த இளைஞர் சங்கக் கட்டிட மண்டபத்தின் அஸ்திவாரக் கல்நாடும் விழா நேற்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. பிரதம மந்திரி திரு டி. எஸ் சேனநாயகா அஸ்திவாரக்கல் நாட்டினார். பௌத்த பிரமுகர்களிலர் விஜயம் செய்திருந்தனர் சங்கத் தலைவர் ஸர் எர்னஸ்ட டி. சில்வா சங்கத்தின் சேவைகளைப்பற்றிப் பேசினார். மண்டபம் கட்டும் செலவு முழுவதும் திரு. சிரில் டி. சொய்சா கொடுக்கிறார்.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான 5-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயற்கை அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்காரம் கடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org